# லீலா தமிழ்ச் செல்வம்

## இரண்டாம் புத்தகம்

ஐந்தாம் படிவம்—சிறப்பு

தொகுப்பாசிரியர் :
T. S. உமாபதி, M.A., L.T., (Dip. in Geog.)
தலைமை ஆசிரியர், சி, அப்துல் ஹக்கிம்
இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

M. சேஷாசலம் அண்டு கம்பெனி
7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை–1

1954

பதிப்புரிமை] [விலை அணா 12

முதற்பதிப்பு—அக்டோபர், 1953
இரண்டாம் பதிப்பு—மே, 1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

Kabeer Printing Works, Madras (2508)

# முகவுரை

'லீலா தமிழ்ச் செல்வம்' என்னும் பெயருடன் வெளி வரும் இத்தொகுப்பு நூல், நமது இராச்சியத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஐந்தாம் பாரத்தில் தமிழைச் சிறப்பாகப் பயிலும் மாணவ மாணவியர்க்குரியது. இது 1952-ஆம் ஆண்டு, ஜுலைத் திங்களில் உயர்நிலைப்பள்ளிகளுக்கென அரசினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை முற்றிலும் பின் பற்றித் தொகுக்கப்பட்டுள்ளது.

இதன்கண் சங்க காலம், இடைக்காலம், பிற்காலம் என்னும் தலைப்புக்களில் இடம் பெற்றுள்ள செய்யுட்பாடங்கள், பண்டு முதல் இன்றளவும் செய்யுள் நிலையில் ஏற்பட்டு வந்துள்ள வேறுபாடுகளை மாணவமாணவியர் அறிதற்குத் துணை புரியுமென்பது எனது எண்ணம். அன்றியும், இப்பாடங்கள் தமிழ்த் தொண்டில் சமய வேறுபாடின்றிச் சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிறித்தவர், இஸ்லாமியர் அனைவரும் ஈடுபட்டுச் சிறந்ததொரு தமிழர் சமுதாயத்தை உருவாக்க முயன்றுள்ளனர் என்பதை விளக்குதலும் ஒருதலை. உரைநடைப் பாடங்களும் அங்ஙனே அமைக்கப் பெற்றுள்ளன.

பாடத்திட்டத்தில் பொதுப் பகுதிக்கு 300 வரி அளவுக்குச் செய்யுட்பாடங்களும், 30 பக்க அளவுக்கு உரைநடைப் பாடங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவாயினும், இடத்துக்கிடம் மாணவ மாணவியர் தரம் வேறுபடக்கூடுமாகலின், தத்தம் மாணவர் நிலைக்கேற்பத் தமிழாசிரியர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளற்பொருட்டுப் பாடத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகட்கு அதிகமாகவே செய்யுட்பாடங்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூல் உருவாதற்கு உறுதுணையாக உயரிய கட்டுரைகள் நல்கிய அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் யான் பெரிதும் கடப்பாடுடையேன். அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இந்நூல் அச்சாகுங்கால் இன்றியமையாத திருத்தங்கள் நல்கி, பிரதிகளை ஒப்புநோக்கி, சிறந்த முறையில் இது வெளி வருமாறு செய்த இதன் பதிப்பாசிரியரும் எனது மதிப்பிற்குரிய கெழுதகை நண்பருமாய வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும் எனது அன்பு கலந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இதற்கு ஆதரவு நல்கி எனக்குத் துணை புரியுமாறு ஆசிரிய அறிஞர் உலகத்துக்கு எனது பணிவு மிக்க வேண்டுகோள் உரியதாகுக.

த. சே. உமாபதி

# நன்றியுரை

இந்நூலின்கண் இடம் பெற்றுள்ள சிறந்த கட்டுரைகளை அன்புடன் அளித்த கீழ்க்காணும் அறிஞர் பெருமக்களுக்கு எமது அன்பு கலந்த நன்றி உரியதாகுக.

**கட்டுரையும் உரிமையாளரும்**

1. முத்தமிழ்
   —திரு. V. S. சுவாமிநாதன் கம்பெனியார், மதுரை.

2. கோவூர் கிழார்
   பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனர்

3. வருடம்—மாதம்—தேதி
   பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், M.A., B.L., M.O.L.

4. கம்பர் கவி நயம்
   —திரு. வே. வேங்கடராசுலு ரெட்டியார்

5. கருத்தைக் கிளத்தல்
   —திரு. T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், F. R. S. A. (Lond.)

# உள்ளுறை

## செய்யுட்பகுதி


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| I. | இறை வணக்கம் | ... | 1 |
| II. | தமிழ் வாழ்த்து | ... | 2 |
| III. | முற்கால இலக்கியம் | | |
| | 1. பத்துப் பாட்டு—பொருநராற்றுப்படை | ... | 3 |
| | 2. எட்டுத் தொகை | | |
| | (அ) குறுந்தொகை | ... | 3 |
| | (ஆ) புறநானூறு | ... | 4 |
| | 3. சீவகசிந்தாமணி—நாமகள் இலம்பகம் | ... | 5 |
| IV. | இடைக்கால இலக்கியம் | | |
| | கந்தபுராணம்—அயனைச் சிறை புரி படலம் | ... | 8 |
| V. | பிற்கால இலக்கியம் | | |
| | சீறாப்புராணம்—மணம் புரி படலம் | ... | 11 |
| VI. | அறவுரை | | |
| | சோமேசர் முதுமொழி வெண்பா | ... | 15 |
| VII. | பல்சுவை | ... | 16 |
| | குறிப்புரை | ... | 18 |

## உரைநடைப்பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மனு நீதி சோழர்<br>—சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் | ... | 24 |
| 2. | முத்தமிழ்<br>—திரு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், B.A. | ... | 29 |
| 3. | சீவராசிகளின் இலக்கணமும் பிரிவும்<br>—பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, M.A. | ... | 37 |
| 4. | கோவூர் கிழார்<br>—பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனர் | ... | 41 |
| 5. | வருடம்—மாதம்—தேதி<br>—பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனட்சி சுந்தரனர், M.A., B.L., M.O.L. | ... | 51 |
| 6. | கம்பர் கவி நயம்<br>—திரு. வே. வேங்கடராசுலு ரெட்டியார் | ... | 61 |
| 7. | கருத்தைக் கிளத்தல்<br>—திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார், F.R.S.A. (Lond.) | ... | 66 |
| 8. | எவரெஷ்டு ஏற்றம்<br>—திரு. த. சே. உமாபதி, M.A.,L.T. (Dip. in Geog.) | ... | 73 |

# லீலா தமிழ்ச் செல்வம்

## ஐந்தாம் படிவம்—சிறப்பு

## செய்யுட்பகுதி

### I. இறை வணக்கம்

எரியெள்ளு வன்ன நிறத்தன் ; விரியிணர்க்
கொன்றையம் பைந்தார் அகலத்தன் ; பொன்ருர்
எயிலெரி யூட்டிய வில்லன் ; பயிலிருள்
காடமர்ந் தாடிய ஆடலன் ; நீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் ; குறங்கறைந்து
வெண்மணி யார்க்கும் விழவினன் ; நுண்ணூல்
சிரந்தை யிரட்டும் விரலன் ; இரண்டுருவா
ஈரணி பெற்ற எழிற்றகையன் ; ஏரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன் ; களங்கனி
மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன் ; தேறிய
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே ! 1

—தொல்காப்பியம், பொருளதிகாரம், சூ. 81 உரைமேற்கோள்

பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி யோங்கும்
கங்குகரை காணுத கடலே ! எங்கும்
கண்ணுகக் காண்கின்ற கதியே ! அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை எல்லாம்
தணிக்கின்ற தருவே!பூந் தடமே ! ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே ! எல்லாம்
செய்யவல்ல கடவுளே ! தேவ தேவே ! 2

—இராமலிங்க அடிகள்

## II. தமிழ் வாழ்த்து

மறைமுதற் கிளந்த வாயான்
    மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி
    இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை
    அனைத்தும்வென்(று) ஆரி யத்தோ(டு)
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
    உள்நினைந்(து) ஏத்தல் செய்வாம்!

—கருணைப்பிரகாச சுவாமிகள்

# III. முற்கால இலக்கியம்

## 1. பத்துப்பாட்டு

### பொருநர் ஆற்றுப்படை

கரிகாற்பெருவளத்தான் சிறப்பு

—வென்வேல்

உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநல்
நாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி,

* * * *

தலைக்கோள் வேட்டம் களிறட் டாஅங்(கு)
இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்

—மூடத்தாமக்கண்ணியார்

## 2. எட்டுத்தொகை

### (அ) குறுந்தொகை

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி !
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ :
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே ? 1

—இறையனார்

அகவல் மகளே! அகவல் மகளே!
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவல் மகளே! பாடுக பாட்டே!
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே! 2

ஔவையார்

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ(து) உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்(று) ஒண்ணுதல் முகனே! 3

—கூடலூர் கிழார்

## (ஆ) புறநானூறு

மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈயென விரக்குவ ராயின், சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்?
இன்னுயி ராயினும் கொடுக்குவென்; இந்நிலத்(து)
ஆற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
உள்ள மெள்ளிய மடவோன், தெள்ளிதின்
துஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே! மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயின், பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே!

—சோழன் நலங்கிள்ளி

## 3. சீவக சிந்தாமணி

### நாமகள் இலம்பகம்

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே. 1

இலங்க லாழியி னுன்களிற் றீட்டம்போல்
கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை
பொலங்கொள் கொன்றையி னுன்சடை போல்மின்னி
விலங்கல் சேர்ந்துவிண் ணேறிவிட் டார்த்தவே. 2

குழவி வெண்மதிக் கோடுழக் கீண்டுதேன்
முழவி னின்றதிர் மொய்வரைச் சென்னியின்
இழியும் வெள்ளரு வித்திரள் யாவையும்
குழுவின் மாடத் துகிற்கொடி போன்றவே. 3

இலங்கு நீண்முடி இந்திரன் மார்பின்மேல்
விலங்கி வீழ்ந்தமுத் தாரமும் போன்றவை
நலங்கொள் பொன்னொடு நன்மணி சிந்தலால்
கலன்பெய் பேழை கவிழ்த்தவும் போன்றவே. 4

வள்ளற் கைத்தல மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை
உள்ள மில்லவர்க் கூர்தொறு முய்த்துராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே. 5

வீடில் பட்டினம் வெளவிய் வேந்தெனக்
காடு கையரிக் கொண்டு கவர்ந்துபோய்
மோடு கொள்புனல் மூரி நெடுங்கடல்
நாடு முற்றிய தோவென நண்ணிற்றே. 6

நெறிமருப் பெருமையி னெருத்த னீளினஞ்
செறிமருப் பேற்றினஞ் சிலம்பப் பண்ணுறீஇப்
பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே 7

சேறமை செறுவினுள் செந்நெல் வான்முளை
வீறுடு விளைகெனத் தொழுது வித்துவார்,
நாறிது பதமெனப் பறித்து நாட்செய்வார் ;
கூறிய கடைசியர் குழாங்கொண் டேகுவார். 8

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. 9

மீன்கணின் அளவும்வெற் றிடங்கள் இன்மையால்
தேன்கணக் கரும்பியல் காடும் செந்நெலின்
வான்புகழ் களிறுமாய் கழனி யாக்கமும்
ஊன்கணுர்க் குரைப்பரி தொல்லென் சும்மைத்தே. 10

ஆய்பிழி விருத்துவண் டயிற்றி யுண்டுதேன்
வாய்பொழி குவளைகள் சூடி மள்ளர்கள்
தேய்பிறை யிரும்புதம் வலக்கை சேர்த்தினர்
ஆய்செநெல் அகன்றகா டரிகுற் றுர்களே. 11

வாளையி னினந்தலை யிரிய வண்டலர்
தாளுடைத் தாமரை கிழிய வண்சுமை
கோளுடை யிளையவர் குழாங்கொண் டேகலிற்
பாளைவாய்க் கமுகினம் பழங்கள் சிந்துமே. 12

ஈடுசால் போர்அழித் தெருமைப் போத்தினல்
மாடுறத் தெழித்துவை களைந்து காலுறீஇச்
சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும்பொனின் குன்ற மொத்தவே. 13

கரும்புகண் ணுடைப்பவர் ஆலை தோறெலாம்
விரும்பிவந் தடைந்தவர் பருகி விஞ்சிய
திருந்துசா றடுவுழிப் பிறந்த தீம்புகை
பரந்துவிண் புகுதலின் பருதி சேந்ததே. 14

கிணைநிலைப் பொருநர் தஞ் செல்லல் கீழ்ப்படாப்
பணைநிலை யாய்செநெற் பகரும் பண்டியும்,
கணைநிலைக் கரும்பினிற் கவரும் பண்டியும்,
மணநிலை மலர்பெய்து மறுகும் பண்டியும், 15

மல்லலந் தெங்கிள நீர்பெய் பண்டியும்,
மெல்லிலைப் பண்டியும், கமுகின் மேதகு
பல்பழுக் காய்க்குலை பெய்த பண்டியும்,
ஒல்குதீம் பண்டம்பெய் தொழுகும் பண்டியும், 16

கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும்,
நெருங்குபு முதிரையி னிறைந்த பண்டியும்,
பெருங்கலிப் பண்டிகள் பிறவும் செற்றுபு
திருந்தியெத் திசைகளும் செறிந்த என்பவே. 17

—திருத்தக்கதேவர்

# IV. இடைக்கால இலக்கியம்

## கந்த புராணம்

### அயனைச் சிறை புரி படலம்

மேட மூர்த்தி யாக வுய்த்து விண்ணு மண்ணு முருகவேள்
ஆடல் செய்து லாவி வெள்ளி யசல மீதி லமர்தரு
நீடு நாளி லொருப கற்கண் நெறிகொள் வேதன் முதலினேர்
நாடி யீசன் அடிவ ணங்க அவ்வ ரைக்கண் நண்ணினுர். 1

எனுதி யானெ னுஞ்செ ருக்கி கந்து தன்னு ணர்ந்துளார்
மனுதி கொண்ட செய்கை தாங்கி மரபின் முத்தி வழிதரும்
அனுதி யீச னடிவ ணங்கி யருள டைந்து மற்றவன்
தனுது மன்ற நீங்கி வாயில் சாரு கின்ற வேலையில். 2

ஒன்ப தோடி லக்க மான அனிக வீர(ர்) உள்மகிழ்ந்(து)
அன்பி னேடு சூழ்ந்து போற்ற அமல னம்பொன் ஆலயம்
முன்பு நீடு கோபு ரத்துள் முழும ணித்த லத்தின்மேல்
இன்பொ டாடி வைகி ஞன்இ ராறு தோள்ப டைத்துளான். 3

அங்கண் வைகு முருக னம்ப னடிவ ணங்கி வந்திடும்
புங்க வர்க்கு ளாதி யாய போதி ஞனை நோக்குரு,
'இங்கு நம்முன் வருதி யால்,'எ னுவி ளிப்ப ஏகியே
பங்க யாச னத்தி னேன்ப ணிந்தி டாது தொழுதலும் 4

ஆதி தேவ னருளு மைந்த னவனு ளத்தை நோக்கியே,
'போத னே!இ ருக்'எ னுப்பு கன்றி ருத்தி, 'வைகலும்
ஏது நீபு ரிந்தி டும்இ யற்கை?' என்ன, நான்முகன்,
'நாத னுணை யாலனைத்தும் நான்ப டைப்பன்,' என்றனன். 5

முருக வேள துகேட்ட லும் முறுவல்செய் தருளித்
'தரணி வானுயிர் முழுவதுந் தருதியே என்னிற்

சுருதி யாவையும் போகுமோ ? மொழி'எனத் தொல்சீர்ப்
பிரம னென்பவன் இத்திறம் பேசுத லுற்ருன்: 6

'ஐய! கேள்:எனை யாதிகா லந்தனி லளித்த
மையு லாவரு களத்தினன் அளப்பிலா மறைகள்
செய்ய வாகமம் பற்பல புரிந்ததிற் சிலயான்
உய்யு மாறருள் புரிந்தனன் அவையுணர்ந் துடையேன்.' 7

என்று நான்முகன் இசைத்தலும், 'அவற்றினு ளிருக்காம்
ஒன்று நீவிளம் புதி,'என முருகவே ளுரைப்ப,
நன்றெ னுமறை யெவற்றிற்கு மாதியில் நவில்வான்
நின்ற தோர்தனி மொழியைமுன் ஓதினன் நெறியால். 8

தாம ரைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை யெடுத்தனன் பகர்தலும், வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேள், 'நிற்றி!முன் கழறும்
ஓம்எ னப்படும் மொழிப்பொருள் இயம்பு'என்
[றுரைத்தான். 9

முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருகன்
நகைத்து, 'முன்னெழுத் தினுக்குரை பொருள்,'என நவில,
மிகைத்த கண்களை விழித்தனன், வெள்கினன், விக்கித்
திகைத்தி ருந்தனன், கண்டிலன் அப்பொருள் திறனே. 10

எட்டொ ணுதவக் குடிலையின் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலும், 'இதன்பொருள் கருதாய்!
சிட்டி செய்வதித் தன்மைய தோ?'எனுச் செவ்வேள்
குட்டி னன்அயன் நான்குமா முடிகளும் குலுங்க. 11

மறைபு ரிந்திடுஞ் சிவனருள் மதலைமா மலர்மேல்
உறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினல் உதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன ரைக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில். 12

அல்லி மாமலர்ப் பண்ணவன் தனையருஞ் சிறையில்
வல்லி பூட்டுவித்(து) யாவையும் புரிதர வல்லோன்
எல்லை தீர்தரு கந்தமால் வரைதனில் ஏகிப்
பல்லு யிர்த்தொகை படைப்பது நினைந்தனன் பரிவால். 13

ஒருக ரந்தனிற் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனிற் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம்பொருள் மகனோர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான். 14

உயிரி னுக்குயி ராகியே பரஞ்சுட ரொளியாய்
வியன்ம றைத்தொகைக் கீறதாய் விதிமுத லுரைக்கும்
செயலி னுக்கெலா மாதியாய் வைகிய செவ்வேள்
அயனெ னப்படைக் கின்றதும் அற்புத மாமோ? 15

—கச்சியப்ப சிவாசாரியார்

# V. பிற்கால இலக்கியம்

## சீறுப் புராணம்

### மணம் புரி படலம்

வானவர் மகளிர் இன்னணம் இயம்பி
மனத்துறு துயருழன் றுலைப்பத்
தேனிமி ரலங்கற் செழும்புயக் குரிசிற்
செம்முகம் பருதிய தென்னக்
கானமர் குழலார் செவ்வரி வேற்கட்
கணமெலா நெருஞ்சியை நிகர்ப்பத்
தானவா ரணமும் பரிகளு மிடையச்
சுற்றமுந் தழீஇவரப் போந்தார். 1

சலதரக் கவிகை நெடுநிழல் பரப்பச்
சலதியிற் பல்லியங் கறங்கக்
குலவிய கொடியுங் கவரியும் விரியக்
கொலைமதக் களிறுக ணெருங்கப்
பலகதிப் பரியு மரசரு மிடையப்
பாவல ரினிதுவாழ்த் தெடுப்பக்
கலைவலர் குவைலி தினிதலங் கரித்த
கடைத்தலைக் காவணம் புகுந்தார். 2

வரைதிரள் வயிரப் புயமுகம் மது நன்
மணமலர்க் காவணம் புகுதத்
திரையினிற் பிறந்த வமுதெனு மொழியார்
செழுமணித் தீபங்க ளேந்த
இருபுறம் நெருங்கி அயினிநீர் சுழற்ற
எண்ணில ராலத்தி யெடுப்பப்
பரவையின் மறையுங் குரவையுஞ் சிலம்பப்
பரியைவிட் டிறங்கின ரன்றே. 3

பணித்தொகை சுமத்தி யிளைத்தநுண் ணிடையார்
பங்கயக் காப்பனி நீரால்
மணிப்பதம் விளக்கித் துகிலினாற் றுடைத்து
வரிசையின் முறைபல பணித்தார்,

துணர்ப்பசுங் கொழுந்து மலர்களுஞ் சொரிந்த
தூநறைப் பாயலி னடந்து
கணிப்பருங் கதிர்கள் பாய்மணித் தவிசின்
முகம்மது கவின்பெற விருந்தார். 4

அமரர்விண் ணுலகும் புவனமும் விளக்கும்
அணிவிளக் கெனுங்கதி ஜாவைத்
தமனியத் தசும்பு நனிவிரை கமழ்ந்த
தண்ணறும் புதுப்புன லாட்டி,
உமிழ்கதிர்க் கொடியை வெண்ணிலாக் கலைவந்
துடுத்தபோற் கலையெடுத் துடுத்திச்
சுமையிருட் காவின் முகில்தவழ்ந் தென்னச்
சுரிகுழற் ககிற்புகை கமழ்த்தி 5

இருட்குல மனைத்தும் பிடித்தொரு தலத்தில்
இருத்துவ தெனக்குழ லிறுக்கி,
அருட்டமுண் டறுகாற் சுரும்பினம் அலம்பும்
அலங்கலை யிலங்குற வணிந்து,
திருத்திய முகிலிற் சசிக்கிடை கதிருஞ்
சேர்ந்தெனத் திருப்பிறை தரித்துப்
பொருத்திளம் பிறையில் விரிச்சிகன் கதிர்கள்
புரண்டென நுதற்கணி புனைந்தார். 6

வள்ளையைக் கிழித்துக் குமிழினைத் துரந்து
மதர்விழிக் கஞ்சன மெழுதிக்
கொள்ளைவெண் கதிர்விட் டுமிழ்மணிப் பணியைக்
கொழுமடற் குழைமிசை சுமத்தித்
தெள்ளிய பணிலச் செழுமணிக் கழுத்திற்
றிரள்பணித் தொகைபல திருத்தி
விள்ளரும் பசிய கழைக்குலம் பொருவா
விளங்குதோ ளணிபல தரித்தார். 7

கரவளை தரித்து விரலணி பொருத்திக்
கதிர்கொண்மே கலைபல புனைந்து,
சரணிணைச் சிலம்புஞ் சில்லரிச் சதங்கை
தருசிறு சிலம்பொடு தரித்து,

விரிகதிர்ப் பவளக் கொடியெனும் விரல்கள்
விளைந்தபொன் மணிப்பணி செறித்துப்
பருதியின் கரங்கண் டுவக்குறும் வனசப்
பதத்தலத் தகமெழு தினரே. 8

செரிந்தசந் தனமுங் கலவையும் புழுகுஞ்
சிலதியர் தட்டினி லேந்த
எறிந்தசா மரையின் கதிர்கள்கொப் பளிப்ப
இலங்கிழை இருளையர் ஏந்த,
வரைந்தபா ளிதம்பா கிலையெடுத் தேந்தி
மருங்கினிற் சிலதிய ருதவ,
நிறைந்தபூண் சொரிந்த கோடிகஞ் சுமந்து
நின்றனர் மடவிய ரொருங்கே. 9

பேரழ கொழுகும் பெண்ணலங் கனியைப்
பிரசமூ றியமொழிக் கரும்பை
ஆரணக் கடலுக் கமுதநா யகியை
அரிவையர் முறைமுறை வாழ்த்திப்
பாரினிற் செறித்த மலர்மிசை நடத்திப்
பல்லிய முரசொடு கறங்க
மாரனி னிலங்கும் முகம்மது மருங்கின்
மணித்தவி சிடத்திருத் தினரே. 10

பொருவருங் கதிர்விட் டெழும்பொருப் பிடத்திற்
பூத்தகொம் பிருந்தது போன்றுந்
தெரிதரு மறிவின் றருநிழ லுறைந்த
செழும்பொறைப் பசுங்கிளி யெனவும்
முருகவிழ் மலரிற் றேன்றுளித் தெனவும்
முகம்மதி னிடத்தினிற் கதிஜா
பரிவுட னிருப்ப அமரருங் களிப்பச்
செல்வமும் படர்ந்தெழுந் தனவே. 11

இருகிளை யவருஞ் சம்மதித் தைந்நூ
றிரசித மகரெனப் பொருந்திக்
கருமுகிற் கவிகை முகம்மது தமக்குங்
காரிகை கனங்குழை தமக்கும் •

மருமலர்த் தொடையல் புனையுநிக் காகை
மணத்துடன் முடித்திடு மென்னப்
பெருகிய ஹாஷிம் குலத்தவ ரனைத்தும்
பிரியமுற் றுரைத்தன ரன்றே. 12

முதியவ ருவந்து நீதிமுன் மார்க்க
முறைப்படி சடங்குகண் முடிப்ப,
மதிவலர் குவைலி தகமகிழ்ந் தெழுந்து
முகம்மதின் செழுமணிக் கரத்திற்
புதுமதி வதனச் செழுங்கொடிக் கதிஜா
பொன்மலர்க் கரத்தினைச் சேர்த்திக்
'கதிர்மதி யுளநாள் வாழ்க!'என் றிசைத்துக்
கண்களித் தினிதுவாழ்த் தினரே. 13

செறிதரு மடவார் குரவைக ளியம்பத்
திரளொடு பல்லிய மார்ப்ப,
அறிவினர் வாழ்த்த, ஆணர்க ளேத்த,
அந்தரத் தமரர்கள் களிப்பக்
குறைவிலா துயர்ந்து தழைத்தினி தோங்குங்
குலக்கதி ஜாவெனுங் கொடியும்
மறைபடா தெழுந்த மதிமுகம் மதுவும்
மணவறை புகுந்தன ரன்றே. 14

—உமறுப் புலவர்

# VI. அறவுரை

## சோமேசர் முதுமொழி வெண்பா

### ஒழுக்கமுடைமை

தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்லுரையான் சோமேசா !—ஆயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 1

### பொறையுடைமை

ஒட்டலன்செய் தீமைக் கொருதுநம ரென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா !—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 2

### வாய்மை

பிள்ளையுட னுண்ணப் பேசியழைத் தாரன்பு
துள்ளு சிறுத்தொண்டர் சோமேசா !—உள்ளுங்கால்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 3

### வெகுளாமை

பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா !—கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னா'செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 4

—மாதவச் சிவஞான யோகிகள்

# VII. பல்சுவை

## நூற்பயிற்சி செய்யும் முறை

நூல்பயில் இயல்பே நுவலின்,வழக் கறிதல்,
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
ஆசான் சார்ந்தவை அமைவரக் கேட்டல்,
அம்மாண்(பு) உடையோர் தம்மொடு பயிறல்,
வினுதல், வினுயவை விடுத்தல் என்றிவை
கடனுக் கொளினே மடம்நனி இகக்கும். 1

ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்,
பெருக நூலிற் பிழைபா(டு) இலனே. 2

முக்காற் கேட்பின் முறையறிந்(து) உரைக்கும். 3

—பவணந்தி முனிவர்

## சிலேடை

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தான் அரனெருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம். 4

—தொட்டிக்கலை-சுப்பிரமணிய முனிவர்

இல்லக் குறத்தியரும் யாக்கைநிலை வேட்டவரும்
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே !—நல்ல
புதுப்பூவை வண்ணத்தான் போர்முகத்துச் செவ்வாய்
மதுப்பூவை வண்ணத்தான் வாழ்வு. 5

—திவ்விய கவி பிள்ளைப்பெருமாளையங்கார்

## பூவை-கலியாண சுந்தரரும், திரிசிரபுரம்-மீனுட்சி சுந்தரனும்

சீர்பெருகும் சிரபுரத்து மீனுட்சி
சுந்தரநற் செம்ம லேறே!
ஏர்பெருகும் நின்வீட்டு வாயிலினில்
நிற்கின்றேன் எனைஅ ழைத்துப்

பேர்பெருகும் கல்விநலம் மேன்மேலும்
என்றனக்குப் பிறங்கி ஓங்க
ஆர்பெருகும் நின்ஆசி யினைக்கூறி
அன்புடனே ஆட்கொள் வாயே! 6

—பூவை–கலியாணசுந்தரனர்

கலியாண சுந்தர!என் கண்மணியே! நின்பால்
மலிவாகக் கல்வி வளரும்;—பொலிவாகப்
பொற்புவியிற் கற்ருேர் புகழச் சிவஞான
விற்பனனுய் வாழ்ந்திருக்க வே! 7

—திரிசிரபுரம்–மீனுட்சி சுந்தரனர்

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான்; புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதிசெயும்; தருக்கள் எல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்;
பூதந்தந் தொழில்செய் தேத்தும்;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்;
அகமே!நீ வாழ்த்தா தென்னே? 8

—மாயூரம்–வேதநாயகம் பிள்ளை

## தமிழ்த் தாய்

இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிவெடுத்துச்
செயற்கைகடந் தியலிசையில் செய்நடமே வாழியரோ!
தமிழென்ற போதினிலே தாலூறல் உண்மையதே
அமிழ்தாகி உயிரினுக்கும் யாக்கைநிலை செழிப்புறுமே!
பழந்தமிழர் வீரஒளி படர்ந்தீண்டில் இந்நாளே
இழிந்தோடும் இடர்ப்பிணிகள் எழுந்தாயின் தமிழ்நடமே!
சாதிமதச் சண்டையெலாம் தமிழின்பம் நுகரார்க்கே
ஆதியிலே சண்டையிலை அருந்தமிழை அருந்தினரால்!
பன்மொழியில் உளகலைகள் பசுந்தமிழில் உருக்கொள்ள
நன்முயற்சி யெழவேண்டும்; நலமுறுவள் தமிழ்த்தாயே.

—திரு. வி. கலியாண சுந்தரனர்

# குறிப்புரை

## I. இறை வணக்கம்

1. இது எட்டுத் தொகையினுள் ஒன்றான பரிபாடலின் இறை வணக்கம் என்று கருதப்படுகிறது.

எரி - நெருப்பு, இணர் - பூங்கொத்து, அகலத்தன் - மார்பினன், பொன்றார் - அழியாத பகைவர், எயில் - மதில், புறம் புதை - பின் புறம் பொருந்திய, குறங்கு - துடை, சிரந்தை - உடுக்கை, மறு மிடற்றன் - கரிய கழுத்தை உடையவன் (சிவபெருமான்).

2. கங்கு - எல்லை, சோடை - சோர்வு.

## II. தமிழ் வாழ்த்து

கிளந்த - சொன்ன, முகிழ் - கொன்றையரும்பு, வேணி - சடை.

## III. முற்கால இலக்கியம்

### 1. பத்துப்பாட்டு

**பொருநர் ஆற்றுப்படை:** பஃறேர் - பல தேர், இளையோன் - இளஞ்சேட்சென்னி, சிறுவன் - புதல்வன், குருசில் - தலைவன், தாயம் - அரசுரிமை, எய்யா - அறியாத, தெருமரல் - கவலை, கலிப்ப - பெருக, பவ்வம் - கடல், செகில் கொண்டு - தோளில் வைத்து, மீளி - கூற்றுவன், தலைக் கொள் - முதலில் மேற்கொண்ட, தெரியல் - மாலை, வெண்ணி - சோழ நாட்டிலுள்ள வெண்ணியென்னும் ஊர்.

### 2. எட்டுத் தொகை

#### (அ) குறுந்தொகை

1. அம்சிறை - (அகம் + சிறை) உட்சிறகு, தும்பி - வண்டு, காமம் செப்பாது - ஓரம் சொல்லாமல், மொழிமோ - சொல்வாயாக, எயிற்று - பற்களையுடைய, அரிவை - பெண்; நறியவும் - வாசனையுடையவையும்.

2. அகவல் மகள் - தெய்வத்தை அழைத்துக் குறி சொல்பவள், அகவல் - அழைத்தல், மனவு - சங்கு மணி, கோப்பு - கோவை, அவர் - அந்தத் தலைவருடைய, குன்றம் பாடிய - குன்றத்தைப் புகழ்ந்து பாடிய.

3. முளி தயிர் - தோய்ந்த தயிர், காந்தள் - காந்தள் மலரைப் போன்ற, கழுவுறுகலிங்கம் - துடைத்த ஆடை, கழாஅது - துவைக்காமல், உடீஇ - உடுத்து, குவளை - குவளை மலர் போன்ற, உண்கண் - மையுண்ட கண்களில், குய்ப்புகை - தாளிப்பின் புகையானது, கமழ - மணக்கும்படி, துழந்து - துழாவி, அட்ட - சமைத்த, தீம்புளிப்பாகர் - இனிய புளிக் குழம்பை, உண்டலின் - உண்பதால், ஒண்ணுதல் - ஒளி பொருந்திய

நெற்றியை உடைய தலைவியின், முகன் - முகமானது, நுண்ணிதின் மகிழ்ந்தன்று - நுட்பமாகக் களித்தது.

'தலைவி தன் கணவன் விரும்பும்படி வேலை செய்து வருகின்றுள்,' என்பது கருத்து.

## (ஆ) புறநானூறு

நல்லடி - அழகிய பாதம், இரக்குவராயின் - யாசிப்பாராஞல், தாயத்து - உரிமையையுடைய, தஞ்சம் - எளியது, எள்ளிய - இகழ்ந்த, மடவோன் - அறிவிலி, துஞ்சுபுலி - தூங்குகின்ற புலியை, சிதடன் - குருடன், பெயர்தல் - நீங்குதல், மைந்து - வலிமை, கழை - மூங்கில், பொரேஎன் - போர் செய்யமாட்டேன், முயக்கு - சேர்க்கை.

## 3. சீவகசிந்தாமணி

### நாமகள் இலம்பகம்

1. மாண்ட - மாட்சிமைப்பட்ட, கமுகின் எற்றி - பாக்குக்குலையை விழச்செய்து, பூ மாண்ட - பொலிவுற்று மாட்சிமைப்பட்ட, தேன்தொடை கீறி - தேன் அடையைச் சிதைத்து, வருக்கை - பலாப்பழம், போழ்ந்து - பிளந்து, இசையால் திசை போயது - புகழால் திக்கெல்லாம் பரவியது.

2. ஆழியினுன் - சக்கரத்தையுடைய திருமால், களிற்றீட்டம் - யானையின் கூட்டம், தெள் திரை - தெளிந்த அலை, பொலம் - அழகு, கொன்றையினுன் - சிவபெருமான், கணமழை - (மழைக் கணம்) மேகக் கூட்டம், விலங்கல் - மலை, ஆர்த்த - ஆரவாரித்தன.

3. குழவி வெண்மதி - பிறைச் சந்திரன், தேன் - தேன் அடை, முழவின் - மத்தளத்தைப்போல, மொய் - நெருங்கிய, சென்னி - உச்சி, குழுவின் - கூட்டமான.

4. இலங்கு - விளங்குகின்ற, விளங்கி வீழ்ந்த - பிணைத்திட்ட மாலை போல வீழ்ந்த, கலன் பெய்பேழை - ஆபரணங்கள் வைத்த பெட்டி.

5. வள்ளல் கைத்தலம் - வண்மையுடைய கை, நிதிக்குப்பை - நிதித் திரள், உய்த்துராய் - பொருந்தி.

6. வீடில் - குடி நீங்குதல் இல்லாத, வெளவிய - கொள்ளை கொண்ட, கை - திரைகளாகிய கை, நாடு முற்றியதோ - நாட்டை வளைத்ததோ.

7. நெறிமருப்பு - அறல்பட்ட கொம்பு, எருமையின் ஒருத்தல் - எருமைக் கடா, சிலம்ப - முழங்க, பொறி - புள்ளி.

8. சேறமை - சேறு பொருந்திய, செறுவினுள் - கழனியில், நாறிது - இந்நாற்று, கடைசியர் - உழத்தியர்.

9. சொல் - நெல், சூல் - கருப்பம், மேலலார் - நற்குடிப் பிறவாத வர், தலை நிறுவி - தலை நிமிர்ந்து, இறைஞ்சி - வளைந்து.

10. வெற்றிடம் - பாழ் நிலம், தேன் கணம் - வண்டுகளின் கூட்டம், கரும்பு இயல்காடு - கரும்பு வளர்ந்த காடு, களிறுமாய் - யானை நின்ருலும்

மறையத்தக்கதாய், கழனியாக்கமும் - செந்நெல்லின் முதிர்ச்சியும், ஊன் கண்ணூர் - மக்கள், ஒல்லென் சும்மைத்து - ஒல் என்னும் ஓசை உடையது.

11. பிழிவு இருத்து - கள்ளை வடிகட்டி, வண்டு அயிற்றி - வண்டை ஊட்டி, தேய்பிறை இரும்பு - தேய்பிறை போன்ற அரிவாள், செநெல் - செந்நெல், அகன்ற - விசாலமான.

12. வாளையின் இனம் தலை இரிய - வாளைமீன்களின் கூட்டம் தாக்குவதினால், வண்சுமை - வலிய சுமை, கோளுடை - கோட்பாட்டை உடைய, பாளைவாய்க் கமுகு - பாளைகளைத் தலையில் தாங்கிய பாக்கு மரங்கள்.

13. ஈடு சால் - பெருமை நிறைந்த, போர் அழித்து - நெல் தாளின் போரின் தலையைத் தள்ளி, எருமைப்போத்து - எருமைக்கடா, மாடுற - பக்கத்திலே, தெழித்து - உரப்பி (மிதிக்கச் செய்து), வை - வைக்கோல், கால் உறீஇ - காற்றில் தூற்றி, சேடுற - அழகு பொருந்த, கூப்பிய - குவித்த, குப்பைகள் - பொலிகள் (அம்பாரங்கள்), கோடு - சிகரம்.

14. கண்ணுடைப்பவர் - சாறு கொள்பவர், விரும்பி வந்து அடைந்தவர் - சாற்றைக் குடிக்க விரும்பி வந்தவர், விஞ்சிய - எஞ்சிய, சாறு அடுவுழி - பாகு காய்ச்சுமிடத்து, பருதி - சூரியன், சேந்தது - சிவந்தது.

15. கிணை நிலைப் பொருநர் - மருதநிலப் பறை கொட்டும் பொருநர் (பொருநர் - ஒரு சாதியார்), செல்லல் கீழ்ப்பட - வறுமை நீங்க, பணை நிலை - மருதநிலத்தில் நிலைபெற்ற, பகரும் - விலை கூறும், பண்டி - வண்டி, கணை நிலை - கணுக்கள் பொருந்திய, கரும்பினிற் கவரும் பண்டியும் - கரும்பினின்று எடுக்கப்படும் பாகு முதலியவற்றைக்கொண்டு செல்லும் வண்டியும், மறுகும் - போகும்.

16. மெல்லிலை - வெற்றிலை, பழுக்காய்க்குலை - பழுத்த பாக்குக் குலை, தீம்பண்டம் - இனிய பழம், ஒழுகும் பண்டி - இடைவிடாது செல்லும் வண்டி.

17. கடல் வளம் - சங்கு, பவழம், முத்து, உப்பு முதலியன, கரையும் - முழங்கும், நெருங்குபு - நெருங்கி, முதிரை - துவரை, பெருங்கலி - மிக்க ஓசை, செற்றுபு - செறிந்து.

## IV. இடைக்கால இலக்கியம்

### கந்தபுராணம்

1. மேடமூர்த்தி - தகர்ப்பரியை (ஆட்டை) உடைய முருகன், உய்த்து - எழுந்தருளி, வெள்ளி அசலம் - வெள்ளி மலை, வேதன் - பிரமன், ஈசன் - சிவபெருமான், அவ்வரை - அம்மலை.

2. எனுதியானெனுஞ் செருக்கு - (எனுது + யான் + எனும் + செருக்கு) - என்னுடையது யான் என்னும் கருவம், இகந்து - நீங்கி, தன்னுணர்ந்துளார் - தன்னையும் தலைவனையும் உணர்ந்தவர், மற்றவன் - சிவபெருமான், வேலை - சமயம்.

3. ஒன்பதோடிலக்கம்-லட்சத்து ஒன்பது, அமலன் - சிவபெருமான்.

4. வைகும் முருகன் - தங்கியிருந்த முருகப்பெருமான், நம்பன் - சிவபெருமான், புங்கவர் - தேவர், ஆதியாய - முதல்வனான, போதினை - பிரமனை, நோக்குறு - நோக்கி, வருதியால் - வருக, என விளிப்ப - என்று அழைக்க, பங்கயாசனத்தினன் - தாமரை மலரை இருப்பிடமாக உடைய பிரமன், பணிந்திடாது தொழுதலும் - முடி வணங்காமல் தொழுததும்.

5. போதனே - பிரமனே, வைகலும் - தினமும், புரிந்திடும் - செய்யும், இயற்கை - வழக்கம்.

6. முறுவல் - புன்னகை, சுருதி - வேதம், போகுமோ - தெரியுமோ?

7. மையுலாவருகளத்தினன் - கரிய நிறம் பொருந்திய கழுத்தை யுடைய சிவபெருமான், புரிந்ததில் - திருவருள் செய்ததில், உய்யுமாறு - வாழும்படி, உணர்ந்துடையேன் - அறிந்திருக்கின்றேன்.

8. இருக்காம் ஒன்று - இருக்கு வேதத்தை, நவில்வான் - சொல்லுதற்கு, ஓர் தனி மொழி - குடிலை (ஓம் என்னும் பிரணவம்), நெறியால் - முறைப்படி.

9. தாமரைத்தலை - தாமரையினிடத்தில், குடிலை - பிரணவம், மாமறைத்தலை - இருக்கு வேதத்தின் முதலடி, காமர் - அழகு, நிற்றி - நில், முன் கழறும் - முதலில் சொல்லிய.

10. மிகைத்த கண்கள் - எட்டுக் கண்கள், வெள்கினன் - நாண மடைந்தான்.

11. எட்டொணு - அறிதற்கு முடியாத, இனைத்தென்று - இன்ன தன்மையதென்று, கட்டுரைத்திலன் மயங்கலும் - விரித்துரைக்க முடியா தவனாய் மயங்கியதும், கருதாய் - அறியாய், சிட்டி - சிருஷ்டி.

12. சிவனருள் மதலை - முருகன், மாமலர்மேல் உறை புரிந்தவன் - பிரமன், பரிசனர் - சூழ இருந்த லட்சத்து ஒன்பதின்மர் (ஏவல் செய் வோர்), கொடே - கொண்டு, நிகளச் சிறை - சங்கிலி பூட்டிய சிறை, கந்தமாஞ்சிலம்பு - கந்தகிரி.

13. அல்லி மாமலர்ப் பண்ணவன் - பிரமன், வல்லி - கால் விலங்கு, பரிவால் - விருப்பத்தினால்.

14. கண்டிகை வடம் - உருத்திராக்க மாலை, பரித்து - தாங்கி, குண்டிகை - கமண்டலம், வரதம் - வரமளித்தல், அபயம் - அடைக்கலம், விதி செய்தான் - சிருட்டி செய்தான்.

15. வியன் - சிறப்பான, மறைத் தொகை - வேதங்களின் தொகுதி.

## V. பிற்கால இலக்கியம்

### சீருப்புராணம்

1. இன்னணம் - இவ்வாறு, உலைப்ப - துன்புறுத்த, அலங்கல் - மாலை, குரிசில் - தலைவன், செவ்வரி - சிவந்த கோடுகள், கணம் - கூட்டம், வாரணம் - யானை, மிடைய - நெருங்க.

2. சலதரம் - முகில், சலதியில் - கடல் போல, பல்லியம் - வாத்தியம், கறங்க - ஒலிப்ப, கலை வலர் - கலையில் வல்லவர், காவணம் - பந்தல்.

3. வரை - மலை, திரை - அலை, அயினிநீர் - சோறு கலந்த ஆலத்தி நீர், குரவை - கைகோத்தாடல், சிலம்ப - ஒலிக்க.

4. பணித்தொகை - ஆபரணங்கள், துகில் - ஆடை, பணித்தார் - செய்தார், துணர் - கொத்து, கணிப்பரு - கணக்கிட்டுக் கூற முடியாத, மணித்தவிசு - இரத்தினங்கள் பதித்த பீடம்.

5. கதிஜா - முகம்மதுவின் மனைவி, தமனியம் - பொன், தசும்பு - குடம், விரை - மணம், கலை - ஆடை, சுரி - சுருண்ட.

6. அருட்டமுண்டு - மயங்கி, சசி - சந்திரன், கதிர் - சூரியன், விரிச்சிகன் - சூரியன், நுதல் - நெற்றி.

7. வள்ளை - ஒரு கொடி, குமிழ் - குமிழம்பூ, பணிலம் - சங்கு, கழை - மூங்கில், பொருவா - ஒப்பாகாத.

8. விரலணி - மோதிரம், சரண் இணை - இரண்டு பாதங்கள், சில்லரி - ஒலிக்கின்ற சிலம்பினுள் பருக்கை (பரல்), பருதியின் கரம் கண்டு உவக்குறும் வனசம் - சூரியனின் கிரணங்களைக் கண்டு மகிழும் தாமரை, அலத்தகம் எழுதினர் - செம்பஞ்சுக் குழம்பு ஊட்டினர்.

9. சிலதியர் - தாதியர், இழை - ஆபரணம், இகுளையர் - பணிப் பெண்கள், பாளிதம் - சர்க்கரை, கோடிகம் - பூந்தட்டு.

10. பிரசம் - தேன், ஆரணம் - வேதம், பல்லியம் - வாத்தியம், கறங்க - ஒலிக்க, மருங்கினில் - அருகில், தவிசு - பீடம்.

11. பொருப்பு - மலை, முருகவிழ் - மணம் வீசுகின்ற.

12. இரு கிளையவர் - மணமகன் சுற்றத்தாரும் மணமகள் சுற்றத் தாரும், தொடையல் - மாலை, நிக்காகை - திருமணம்.

13. குவைலிது - திருமணம் நடத்தி வைக்கும் குரு, இசைத்து - கூறி.

14. குரவைகள் இயம்ப - கைகோத்துப்பாட, ஆணர் - பாடகர்.

## VI. அறவுரை

### சோமேசர் முதுமொழி வெண்பா

1. ஒல்லா - பொருந்தா, தீய - தீய சொற்கள், வழுக்கியும் - தவறியும்.

2. ஒட்டலன் - பகைவன், ஒருது - தீமை செய்யாமல், நமர் - நண்பர்.

3. வாய்மை இடத்த - மெய்க்குச் சமம், புரை தீர்ந்த - குற்றமற்ற.

4. பல்லவர்கோன் - பல்லவ மன்னனாகிய மகேந்திரவர்மன், வாகீசர் - திருநாவுக்கரசு நாயனார், இணர் - தொகுதியான சுடர்களை உடைத்தாய, எரி - பெருநெருப்பு, தோய்வன்ன - தழுவினாற்போலும், புணரின் - கூடினால்.

## VII. பல்சுவை

1. நுவலின் - சொல்லுங்கால், அம்மாண்பு உடையோர் - ஆசானை யொத்த கல்வி கேள்வி உடையவர், பயிறல் - பழகல், வினையவை விடுத்தல்- கேட்டவற்றிற்கு விடை கூறல், கடனாகக் கொளின் - கடமையாகக் கொண்டால், மடம் - அறியாமை, இகக்கும் - நீங்கும்.

2. ஒரு குறி - ஒரு முறை.

4. ஆவலுடன் - ஆசையுடன், பாவலரும் - கவிஞர்களும், காவலரை - அரசரை, சூழும் - சூழ்ந்திருக்கும், ஆறு கால் வண்டு இனமும் - ஆறு கால்களை உடைய வண்டின் கூட்டமும், கா - சோலையில் உள்ள, அலரை-மலரை, சூழும் - சூழ்ந்திருக்கும், அரிவையம் பாகத்தான் (அரி + வை + அம்பு ஆகத் தான்)—அரி - விஷ்ணுவை, வை - கூரிய, அம்புஆக - அம்பாக, தான் - சிவபெருமான், அரிவை - உமையம்மையை, அம்பாகத் தான் - அழகிய இடப்பக்கம் உடையவரும் ஆகிய சிவபெருமான், அகம் - இருப்பிடம்.

5. இல்லம் குறத்தியரும் - வீட்டில் இருக்கின்ற குறப் பெண்களும், மெல்லக் கிழங்கு எடுக்கும் - மென்று தின்னும்பொருட்டுக் கிழங்குகளைத் தோண்டி எடுக்கப் பெறும், யாக்கை நிலை வேட்டவரும் - உடம்பு அழியாமல் நிலைத்திருப்பதை விரும்பும் சித்தர்களும், மெல்லக் கிழம் கெடுக்கும் - நாளடைவில் முதுமைப் பருவம் ஒழியப் பெறும், நல்ல புதுப் பூவை வண்ணத்தான் - சிறந்த அன்றலர்ந்த காயம்பூ போன்ற கரிய நிறத்தை உடையவனும், போர் முகத்து - யுத்த களத்தில், செவ்வாய் மது பூ வை - சிவந்த தனது வாயாகிய தேனையுடைய தாமரை மலரில் வைக்கின்ற, வள் நத்தான் - மேன்மையுள்ள சங்கத்தை உடையவன், வாழ்வு - வாழும் இடம்.

6. சிரபுரம் - திரிசிராப்பள்ளி, ஏர் - அழகு, பிறங்கி - விளங்கி, ஆர் - ஆர்வம்.

7. பொலிவாக - விளக்கமுற, விற்பனன் - வல்லவன்.

8. கதிரவன் - சூரியன், புட்கள் - பறவைகள், தருக்கள் - மரங்கள், பூதம் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள், அதிர் - ஒலிக்கின்ற, அகமே - மனமே.

9. தால் - நாக்கு, யாக்கை - உடல்.

# உரை நடைப்பகுதி

## 1. மனு நீதி சோழர்

[சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்]

(மனுநீதி சோழர் தம் புதல்வன் தேரினைப் பசுவின் கன்றின்மீதேற்றி அதைக் கொன்றான் என்பது கேட்டு வருந்துகின்றார்).

''புத்திரப் பேறு பெற்றுப் புனிதனானேன்!' என்று பூரித்திருந்தேனே! 'நம் புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கு ஏற்றவனானான்; இனிக் கல்யாணஞ் செய்விப்போம்!' என்று கனவு கண்டிருந்தேனே! 'நம் புத்திரன் நற்குணங்களையுடையவனாயிருக்கின்றான்; பெற்றெடுத்த நமது பேர் கொண்டு வருவான்,' என்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங்கன்று எதிர் வரவுங் கண் கெட்டுக் கருத்தழிந்தவன் போலத் தேரை நடத்தித் தீராப் பழி பூண்டானே! ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத் தக்க செல்வப் பிள்ளையாகாமல், தென்னம்பிள்ளையானானே! சிவதரிசனஞ் செய்யப் போகிறவன் தேரூர்ந்தே போகப்படாது; அவ்வாறு போயினும், நாற்புறத்திலும் நடப்போர்களை விலகும்படி ஆள் விலக்கிகளை விட்டு, முன்னே பரிக்காரர் வரவு குறித்துப் போகப் பின்னே மெல்லெனத் தேரை விட வேண்டும்; அப்படிச் செய்யாமல், 'பாலியப் பருவம் பயமறியாது,' என்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுக்கன்றைக் கொன்றானே!

'ஐயோ! இவன் கல்வியறிவுள்ளவனாயிருந்தும், அறிவிழந்து, அரசன் பிள்ளையாகாமல், அணிற்பிள்ளையானானே! 'கொடிய பாதகங்களிலெல்லாம் கொலைப் பாதகம் தலைமை,' என்று வேதம் முதலாகிய கலைகளிலேதான் படித்தறிந்தான்; சான்றோர் சொல்லவுங் கேட்டறிந்தான்; அப்படியறிந்திருந்தும், அப்பாதகஞ் சேரவொட்டாமல் தன்னைக் காத்துக்கொண்டு பட்டப்பிள்ளையாகாமல், பழிப்பிள்ளையானானே!

'ஐயோ! 'புதல்வனைப் பெற்றால் புண்ணியம் பெறலாம்,' என்றெண்ணிய எனக்கு, 'மலடாயிருந்தாலும் வாழ்வுண்டு,' என்று நினைக்கும்படி நேரிட்டதே! நான் நெடுநாளாகத் தியாகராஜப் பெருமானை வேண்டிக்கொண்டது இப்படிப்-பட்ட பெரிய பழிக்காளாகிய பிள்ளையைப் பெறத்தானே! பிள்ளை என்ன செய்யும்! பெருமான் என்ன செய்வானே! 'மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு' என்னும் பெரியோர் வார்த்தையின்படி, 'நான் செய்த தீவினையே என் புத்திர-னுக்கு நேரிட்டது,' என்று நினைத்து, என்னை வெறுத்துக்-கொள்ள வேண்டுமென்றாலும், இந்தப் பிறப்பில் என் புத்தி-யறிந்து ஒரு தீங்குஞ் செய்ததில்லையே!

'இந்தப் பிறப்பிலில்லாவிட்டாலும் முற்பிறப்பிலே நல்-லோர் மனத்தை நடுங்கச் செய்தேனே! வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனே! தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனே! கலந்த சினேகிதரைக் கலகஞ் செய்தேனே! மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ்செய்தேனே! குடி வரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனே! ஏழைகள் வயிறு எரியச் செய்தேனே! தருமம் பாராது தண்டஞ்செய்தேனே! மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனே! உயிர்க்கொலை செய்-வோர்க்கு உபகாரஞ் செய்தேனே! களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனே! பொருளை இச்சித்துப் பொய் சொன்-னேனே! ஆசை காட்டி மோசஞ் செய்தேனே! வரவு போக்-கொழிய வழியடைத்தேனே! வேலையிட்டுக் கூலி குறைத்-தேனே! பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனே! இரப்-போர்க்குப் பிச்சை இல்லை என்றேனே! கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனே! நட்டாற்றிற் கையை நழுவ விட்-டேனே! கலங்கியொளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனே! குருவை வணங்கக் கூசி நின்றேனே! குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனே! கற்றவர்தம்மைக் கடுகடுத்தேனே! பெரியோர் பாட்டிற் பிழை சொன்னேனே! பக்ஷியைக் கூண்-டில் பதைக்க அடைத்தேனே! கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனே! ஊன் சுவையுண்டு உடலை வளர்த்தேனே! கல்லும் நெல்லும் கலந்து விற்றேனே! அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனே! குடிக்கின்ற நீருள்ள குளத்தைத்

தூர்த்தேனே! வெயிலுக்கொதுங்கும் விருக்ஷத்தை அழித்தேனே; பகை கொண்டு அயலோர் பயிரை அழித்தேனே! பொது மண்டபத்தைப் போயிடித்தேனே! ஆலயக் கதவை அடைத்து வைத்தேனே! சிவனடியாரைச் சீறி வைதேனே! தவஞ்செய்வோரைத் தாழ்வு சொன்னேனே! சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனே! தாய் தந்தையர் மொழியைத் தள்ளி நடந்தேனே! தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனே! இன்னும் என்ன பாவஞ்செய்தேனே! இன்னதென்றறியேன்!

‘ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்திற் கண்ணீர் ததும்புகின்றதைக் கண்ட என் கண்களை, நுங்கு சூன்றெடுப்பது போலப் பிடுங்கியெறியேனே! ‘இதன் கன்றை உன் புத்திரன் தேர்க்காலில் ஊர்ந்து கொன்ருன்,’ என்று சொல்லக் கேட்ட என் செவிகளைச் செம்பு நீருருக்கி விட்டுச் செவிடாக்கேனே! இந்தப் பசு ஆராய்ச்சி மணியினுல் தன் குறையை அறிவித்த நாழிகை தொட்டு இந்நாழிகை வரையிலும் அக்குறையைத் தீர்ப்பதற்கு வேண்டிய உறுதிமொழியைக் கூருதிருக்கிற என் நாவைச் சூடுள்ள நெருப்பாற் சுடுவேனே! இதற்குத் துன்பமுண்டாக்கினவன் இன்னுனென்று அறிந்தும், அவனை இன்னும் தண்டனை செய்யாது தாழ்த்திருக்கின்ற என் கைகளைக் கத்தியைக்கொண்டு துண்டித்துவிடேனே! இதன் கன்றைப் பிழைப்பிப்பதற்குத் தக்க நன்முயற்சியைத் தேடி, நாலு திக்குகளிலும் நடவாத என் காலைக் கோடரி கொண்டு குறுக்கே வெட்டேனே! இதன் மெலிவை அடிக்கடி கண்டும் வற்றியொடுங்காத மல பாண்டமாகிய என்னுடம்பை வாளாயுதங் கொண்டு மடித்துக்கொள்ளேனே! இதன் பரிதாபத்தையும் எனக்கு நேரிட்ட பழியையும் எண்ணியும் உருகியழியாத உள்ளத்தை வலிய விஷத்தை விட்டு மாய்த்துவிடேனே! நிலையிலா உயிர்க்கஞ்சி இவைகளில் ஒன்றுஞ் செய்யாது உயிர் வைத்திருக்கின்றேனே! என்ன செய்வேன்!

‘பாவிக்குத் தீர்க்காயுள்,’ என்பதற்குச் சரியாகப் பெரும்பாவியாகிய என்னுயிர், தனக்குத் தானேயும் போகின்றதில்லையே! ‘நல்ல பூஜா பலத்தினுல் தெய்வ பத்தியுடன்

செங்கோல் செலுத்தி வருகின்றான் மனுச் சோழன்,' என்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் புகழ்ந்த புகழெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டனவே! நான் அப்புகழை வேண்டினவனல்லன்; ஆதலால், அதுபோகட்டும்; உயிரினும் ஒன்பது பங்கு அதிகமாகத் தேடி வைத்த புண்ணியமும் போகின்றதே! ஆ! நான் நீதி தவறாது அரசு செய்கின்றேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாயிருக்கின்றதே!

'சேங்கன்றைத் தெருவிற்சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை அளவுகோல் என்பேனோ, அஞ்சனக்கோலென்பேனோ! எழுதுகோலென்பேனோ, ஏற்றக்கோலென்பேனோ! கத்தரிக்கோலென்பேனோ, கன்னக்கோலென்பேனோ! குருடன் கோல் என்பேனோ, கொடுங்கோல் என்பேனோ! துடைப்பக்கோலென்பேனோ, துலாக்கோலென்பேனோ! மரக்கோலென்பேனோ, வைக்கோலென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுக்கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோலென்பேனோ! என்ன கோலென்றுதானெண்ணுவேன்!

'இளங்கன்றைக் கொலை செய்யச் சம்மதித்திருந்த என் ஆக்கினை சக்கரத்தைக் கிரகசக்கரமென்பேனோ! அல்லது, இச்சேங்கன்றைச் சிதைத்த தேர்ச்சக்கரமென்பேனோ! என்ன சக்கரமென்றெண்ணுவேன்! இந்தப் பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என் காவலைச் சிறு பெண் காக்கின்ற தினைக்காவலென்பேனோ! குருடன் காக்கின்ற கொல்லைக் காவலென்பேனோ! புல்லாற்செய்த புருடன் காக்கின்ற புன்செய்க்காவலென்பேனோ! வரும்படியில்லான் காக்கின்ற வாயிற்காவலென்பேனோ! பயிரைக் காக்க வைத்த பண்ணைக்காவலென்பேனோ! வேலை வேண்டிக் காக்கின்ற வெறுங்காவலென்பேனோ! அல்லது, இக்கன்றை அடக்கம் செய்யக் காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவலென்பேனோ! என்ன காவலென்றுதானெண்ணுவேன்! என்ன செய்வேன்!

'ஐயோ! இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மனுவென்று பேரிட்டழைப்பது, காராட்டை வெள்ளாடென்றும், அமங்களவாரத்தை மங்களவாரமென்றும், நாகப் பாம்பை நல்ல பாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம் போன்றதல்லது,

உண்மையல்லவே! இனி, இப்பசுக்கன்று உயிர் பெற்றெழுந்திருப்பதற்கு உபாயம், என் புத்திரன் உயிரையேயன்றி, என்னுயிரையும், என் மனையாளுயிரையும், என்னரசாட்சியையும், எனக்கு உரியவாகிய மற்றெல்லாப் பொருள்களையும் கொடுத்துவிட்டால் நேரிடுமென்று சொல்வாருண்டானல், இதோ கொடுத்துவிடுகின்றேன்! அவ்வாறு சொல்வாரும் இல்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும், எனக்கிதனலுண்டாகிய துயரமும் எப்படித் தீருமோ! இப்படி என்றறியேனே! என்ன செய்வேன்!' என்று பல விதமாகப் பரிதவித்திருந்தார்.

# 2. முத்தமிழ்

[திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், B.A.]

**முன்னுரை :**

தொன்று தொட்டுத் தமிழ் மொழி இயல், இசை, **நாடகம்** என்னும் மூன்று பிரிவுகளுடையது என்று பலரும் கூறுகின்றனர். அம்மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம் :

**இயற்றமிழ்** என்பது, தமிழர் யாவர் மாட்டும் பொதுமையின் இரு வகை வழக்கினும் இயங்குகின்ற வசனமும் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களும் ஆகிய யாவும் அடங்கும் என்க. எனவே, இயற்றமிழ் '**செந்தமிழ் கொடுந்தமிழ்**' என்ற வகையினும் படுதலும் ஒக்கும். ஒப்பவே, செந்தமிழ் வசன நூல்களும் செந்தமிழ்ச் செய்யுள் நூல்களும், கொடுந்தமிழ் வசன நூல்களும் கொடுந்தமிழ்ச் செய்யுள் நூல்களும் இவ்வியற்றமிழின்கண் அடங்கும் என்பது தானே விளங்கும். தமிழிற்புலவரும் அல்லாரும் ஒத்து இயங்காமையின் இப்பிரிவிற்கு இடம் உண்டாயிற்று ; தமிழ் நாட்டிற்குள்ளும் இப்பிரிவு ஏற்படலாயிற்று.

"செந்தமிழ் நாடே,
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவரும் தழைத்தினிது இருக்கும்
மங்கலப் பாண்டி வளநாடு என்ப."

என்ற சூத்திரத்தாற் செந்தமிழ் நாடு இன்னது என்பது அறிக. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு குறுநிலங்களும் கொடுந்தமிழ் நாட்டின்பாற்பட்டன.

"தென்பாண்டி, குட்டம், குடம்,கற்கா, வேண்,பூழி,
பன்றி, அருவா, அதன்வடக்கு,—நன்றாய
சீதம், மலாடு, புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட்டு எண்."

என்ற பழைய வெண்பாவினாற் கொடுந்தமிழ் நாடு இன்னவை என்பது அறிக. இனிச் செந்தமிழ் நாட்டைச் சோணாட்டின்கண் வைத்துச் சூத்திரஞ்செய்தாரும் உளர்.

" செந்தமிழ் நாடே,
மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்தமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநாடு என்ப."

என்பதுங் காண்க.

### இயற்றமிழ் :

முற்காலத்தில் சங்கச் செய்யுட்களும் அவற்றின் உரைகளும் இடைக்காலத்துக் ' **கம்பராமாயணம்** ' ஆதிய நூல்களும் அவற்றின் உரைகளும், இக்காலத்து வெளிப்படும் செய்யுள் நூல்களும் ஆகிய யாவையும் இயற்றமிழாம். இவ்வியற்றமிழ், இசைத் தமிழ்க்கும் நாடகத் தமிழ்க்கும் முன்னர்த் தோன்றினமை பற்றி இஃது அவ்விரண்டிற்கும் முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும், இயற்றமிழே அவ்விரண்டிற்கும் உயிர் என விளங்குவது. இயற்றமிழின்றி, அவ்விரண்டும் தனித்து இயங்குவன அல்ல.

### இசைத்தமிழ் :

இசைத்தமிழ் என்பது, பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களானும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானும் இயன்ற இலக்கியங்களும், அவற்றின் இலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண், கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்பாங்கு முதலியனவும் அடங்கும் என்க. இயற்றமிழின்கண் வழங்குஞ் சொற்களுஞ் சொற்றொடர்களும் இன்றி இசைத்தமிழ் எங்ஙனம் இயங்க முடியுமோ! அன்றியும், இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசை எடுத்துத் தாளம் அறுத்துப் பாடப்படின், அவை இசைத்தமிழின்பாற்படும். இராகத்தோடு மட்டில் இயைத்துப் பாடப்படும் பாடல்கள், இயற்றமிழின்பாற்பட்டனவாக மதிக்கப்படுமே அன்றிப் பிறிது இல்லை. தாளமும் உடன் கூடிய வழியே அவை இசைத்தமிழின்பாற்படும் என்க.

முற்காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கிய **பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம்** முதலியனவும் இடைக்-காலத்துத் தோன்றிய **தேவாரம்** முதலியனவும், இக்காலத்து வெளிப்பட்டு உலவுகின்ற **கந்தபுராண கீர்த்தனே, பெரிய புராண கீர்த்தனே, சங்கீத சந்திரிகை** முதலியனவும் ஆகிய யாவும் இசைத்தமிழாம். இவ்விசைத்தமிழ் நாடகத்-தமிழ்க்கு முன்னர்த் தோன்றினமை பற்றி முன் வைக்கப்-படுவதாயிற்று. அன்றியும், இவ்விசைத்தமிழே நாடகத்-தமிழிற்குச் சிறப்பும் விளக்கமும் தந்து நிற்பதாகும். இசைத்-தமிழ் இல்வழி நாடகத்தமிழிற்கு இயக்கம் இல்லே; ஆடை அற்ற நங்கை வெளிப்படாதவாறு போல, இசை அற்ற நாடகத் தமிழும் வெளிப்படுதல் இன்றி, உள்ளடங்கியே இருத்தல் வேண்டும். எனவே, நாடகத் தமிழிற்கு இயற்-றமிழும் இசைத்தமிழும் இன்றியமையாச் சிறப்பினவாம். ஏன்? இயற்றமிழும் இசைத்தமிழுங்கூடிய வழியே நாடகத்-தமிழ் பிறக்கும் என்று கூறுதலே அமைவுடைத்தாம்.

"அன்றியும், நாம் உணர்ந்த பிறபாஷைச் சரித்திரங்-களினும் உற்று நோக்குழி, இயற்ருெடர்நிலேச்செய்யுட்களும் இசைத்தொடர்நிலேச் செய்யுட்களும் ஆகிய பாமுறைகளின் தொடக்கங்கள் ஒருங்கேனும் தனித்தேனும் நாடகக்-கலேயின் தொடக்கங்களுக்கு முன்னரே இருந்துள என்பது மலே இலக்கே. இவ்விரண்டுஞ் சேர்ந்துழியே நாடகமானது நாகரிகமுள்ள நாடுகள் அனேத்தினுங் கலேகளுள் ஒன்று எனக் கருதத் தக்கவாறு தோன்றி வளர்கின்றது. இம்-முறைக்கு இணங்கியே நந்தம் தமிழ் மொழியின்கண்ணும் இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழிற்கு முற்படுவன ஆயின. அன்றியும், மேற்கூறியவாற்ருன் இயற்றமிழும் இசைத்தமிழுங்கூடிய வழியே நாடகத்தமிழ் பிறந்தது என்பதும் பெற்ரும். இது பற்றி அன்றே தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என முப்பகுதியாக்கி முறைப்படுத்தி ஓதியதும் என்க," என்ற நாடக இயலுடையார் கூற்றையும் உற்று நோக்குக.

இனி இடைக்காலத் தொடக்கத்தில் தோன்றிய இசைத்-தமிழ் இலக்கிய நூலாகிய மூவர் தேவாரங்களும் தமிழிற்கே

உரிய பண்ணுந்திறமும் பயின்றனவாகி ஒளிர்கின்றன. அத்தேவாரங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட இசைத் தமிழிலக்கிய நூல்களில் வடமொழி இராக அமைப்பும் தாளஅமைப்பும் காணப்படுகின்றன. இதன்மேல் இற்றை நாட்களில் உலவுறும் இலக்கியமும் இலக்கணமும் ஆகிய இசைத்தமிழ் நூல்கள் எல்லாம், 'மேளகர்த்தா' என்னும் வடநூலைத் தழுவியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சிற்சில நூல்கள் நாட்டியத்திற்கு உரிய வடமொழிப் பரத தாளங்களினும் ஏற்பட்டு இருக்கின்றன. இசைத்தமிழின்கண் ஏற்பட்ட வடமொழிக் கலப்பு இவ்வளவுதான்.

பழைய இசைத்தமிழ் நூல்களுட்பெரும்பாலன இறந்துவிட்டன; இரண்டொன்று மட்டில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவைதாமும் சின்னுட்களில் வெளிப்படாவிடின் அழிந்துபடினும் படும். இவ்வாறு இசைத்தமிழ் நூல்கட்குக் குறைவு நேரக் காரணம் யாது? இடைக்காலத்தில் இருந்த மக்களுக்குள் ஒழுக்கச் சீர்திருத்தஞ்செய்யப் புகுந்த போலி ஆரியர் சில்லோரான் விளைந்த கேடாம் இது. இவ்வுலக வாழ்க்கைக்கு அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் சிறந்தனவாம் என்னும் உண்மையை நன்கு உணராது, 'அறனே யாவரும் பின் பற்றுதற்கு உரியது; மற்று இன்பம் கைவிடுதற்குரியது,' என்று எண்ணி, 'இசையினுல் இன்பம் மிகுதலின் அதனையும் கடிய வேண்டும்,' என்று புகுந்து, ஆரியருஞ் சைனரும் ஒருங்கு சேர்ந்து இசைத்தமிழைப் பெரிதும் அலைத்துத் தொலைக்க முயன்றனர். அம்முயற்சிகளில் அனேக நூல்கள், அந்தோ! அழிந்து போயின! இப்போழ்தத்து எஞ்சியிருப்பன மிகச் சிலவே. இவற்றை இறைவன் பாதுகாத்தருள்க! மேற்கூறிய மருட்கை உணர்ச்சி இக்காலத்தினும் பலரிடம் குடிகொண்டிருக்கின்றது. இஃதென்னே!

**நாடகத்தமிழ் :**

**நாடகத்தமிழ்** என்பது, கையில் நூல் எடுத்துப் படித்தற்கு உரிய அவகாசம் இல்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்-

தோடு வகுக்கப்பட்டது; அது கேட்பார்க்குங் காண்பார்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின், அஃது இன்பச் சுவையோடு இயல்வதாயிற்று. உலகத்தின் இயல்பினை உள்ளதை உள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத்தமிழே அன்றி வேறு இல்லை. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்தவழியே நாடகத்தமிழ் பிறந்தது எனினும், நாடகத்தமிழிற்கு வேறு தனிப்பெருஞ்சிறப்பு உளது. முன்னையன இரண்டும் கேள்வி இன்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. அவ்விரண்டன் அடியாகப் பிறந்த நாடகத்தமிழோ, கேள்வி இன்பம் பயப்பதே அன்றிக் காட்சி இன்பமும் உடன் பயக்கின்றது. இச்சிறப்புப்பற்றியே பிற நாடுகளில் உள்ள பிற பாஷைப் புலவர்கள் நாடகங்களை மிக்க மேன்மை உடையனவாக மதிக்கின்றார்கள்.

இத்துணைப்பெருமை வாய்ந்த நாடகத் தமிழின் தோற்றம் என்னை ? "தமிழ் நாடகம் முதலில் உண்டானது மத விடயமாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல்கள் இரண்டையுஞ்சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின. அதன்மேல் முதலிற்பாடலாய் உள்ள சம்பாஷணைகளும், பின்னர் வசனமாய் உள்ள சம்பாஷணைகளும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பிற்பாடு நாடகத்தமிழ் 'வேத்தியல், பொதுவியல்' என்ற இரு பிரிவினதாகி, அரசர்களானும் ஏனையோரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது. கி.மு. மூன்றும் நூற்றாண்டினுதல் அல்லாக்கால் அதனினுஞ்சற்று முற்காலத்தினுதல் நாடகத்தமிழ் உயர்நிலை உற்றிருந்திருத்தல் வேண்டும். நாம் உணர்ந்த பழைமையான நாடகத்தமிழ் நூல்கள் அனைத்தும் அக்காலத்தே நின்று நிலவின ஆதலின் என்க. ஆகவே, அது குற்றம் குறைவு இல்லாது உண்டானதொரு தொழில் என்றே ஆதியில் மதிக்கப்பட்டது," என்று நாடக இயலின் முகவுரைக்கட்கூறிய கூற்றையுங் காண்க.

இவ்வாறு தோன்றி வளர்ந்த நாடகத்தமிழ் வீழ்நிலையை

அடையப் புகுந்தது. அதற்கு உற்ற காரணம் யாது? ஒழுக்க நிலே வகுக்கப்புகுந்த ஆரியருஞ்சைனரும், நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்றது என்ற போலிக் கொள்கை உடையவராய்த் தம் நூல்களிற் கடியப்படுவனவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறு-கின்றனர்; அக்காலத்து இருந்த அரசர்களுக்குந் துர்ப்-போதனை செய்து நாடகத்தமிழைத் தலையெழ ஒட்டாது அடக்கி வந்தனர். ஔவையாரும் திருவள்ளுவரும் ஒருங்கே புகழ்ந்த இல்லறவாழ்க்கையைத் தீவினை அச்சத்தின்பாற்-படுத்துக் கூறுஞ்சைனர்கள், நாடகத் தமிழைக் கடிந்தது ஓர் ஆச்சரியம் அன்று. இவ்வளவு கட்டுப்பாட்டுக்கு இடை-யில் நாடகத்தமிழ் எவ்வாறு தலை எடுத்து ஓங்கப் போகின்றது? ஆதலின், நாளாவட்டத்தில் அது சிறிது சிறிதாக வீழ்ந்துகொண்டே வாராநின்றது. அதன்மேல் இயற்றமிழ்க் காப்பியங்கள் நாடெங்கும் மலிந்து சிறந்து, நாடகத்தமிழை வளர ஒட்டாது தடுப்பன ஆயின.

இவ்வாறு நாடகத்தமிழ்க்கு நாற்புறத்திலும் தடைகள் அமைக்கப்பட்டமையின், அஃது அழிநிலை அடையத் தலைப்-பட்டது. பண்டிதராயினர் கடிந்து நாடகத்தமிழைக் கைவிடவே, அது பாமரர் கை அகப்பட்டு, இழிவடைந்து, தெருக்கூத்தளவிலே நிற்கின்றது. அக்காலத்துச் சங்கப்-புலவர்கள் செய்த '**பரதம், அகத்தியம், முறுவல், சயந்-தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத்-தமிழ் நூல், கூத்து நூல், நூல்,**' என்ற நாடகத்தமிழ் நூல்கள் எல்லாம் யாண்டுப்போய் ஒளித்தன? '**சிலப்பதி-காரம்**' என்னும் நாடகக் காப்பியம் மட்டிலே தப்பித்தவறி வெளியேறிவிட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டித-சிகாமணி **சாமிநாதையர்க்**குத் தமிழுலகஞ் செய்யக் கடவ கைம்மாறு என்னே!

இனி, பரத சாஸ்திரமும் காமக் கணிகையர் வயப்பட்டுத் தாழ்வடைந்து நின்றது. அதனையும் அற ஒழிக்கப்புகுந்து முழங்குகின்றனர் சிலர். எனினும், கி. பி. பதினேழாம் நூற்றுண்டின் இறுதி தொட்டுக் கூத்து நூல்கள் சில, வேர் அற்று வீழ்ந்த நாடகத்தமிழினின்றும் கிளைப்பன

ஆயின. இடையிடையே கவி கூற்று மேவி இழிசனர் நடிக்குமியல்பினவாகிக் கூத்தும் பாட்டுங்கொண்டு நடப்பன எல்லாம் கூத்து நூல்களாம். **சீர்காழி அருணுசலக் கவிராயர்** செய்த **இராம நாடகமும், குமரகுருபர சுமாமிகள்** செய்த **மீனுக்ஷியம்மை குறமும், திரிகூடராசப்பக் கவிராயர்** செய்த **குற்றுலக் குறவஞ்சியும்** இக்கூத்து நூலின்பாற்படுவனவாம். **முக்கூடற்பள்ளு, பருளை விநாயகர் பள்ளு** முதலியவுங் கூத்து நூல்களேயாம். இவை எல்லாம் இயற்றமிழ்ப் புலமை சான்ற பாவலர் இயற்றியனவாம். '**சுத்தானந்தப் பிரகாசம்**' என்றதொரு பரதநூல் இடைக்காலத்தின் தொடக்கத்தில் ஏற்பட்டுள்ளது, வெளிப்படாமலிருக்கின்றது. பின்னர், கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்த **அரபத்தநாவலர்** என்பார், '**பரதசாஸ்திரம்**' என்றதொரு நூல் செய்துளர்.

நாடகசாலையை உலகத்தின் பிரதிவிம்பம் என்றெண்ணி ஆங்கு நடித்துக் காட்டப்படுவவற்றுள் தமக்கு வேண்டிய நற்பகுதிகளை மட்டில் ஏற்றுப் போவதே நன்மக்கள் இயல்பு. உழைத்த உள்ளத்திற்கு இன்பந்தந்து ஊக்கம் விளைப்பன நாடகங்களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டாராயின், அஃது அவரது இயற்கைத் தன்மைகளுள் ஒன்றுமே அன்றி, நாடகத்தால் விளைந்த செயற்கைத்தன்மை அன்றும். தவறுள்ள இடத்திலன்றே திருத்தம் வேண்டும்? புண்ணுள்ள இடத்திலன்றே சிகிச்சை செய்யவேண்டும்? மக்களுள் சிலர், தமது தீக்குணத்தால் நாடகசாலை சென்றும், நாடகங்கள் படித்தும் கெட்டராக, அதனைக் காகதாலியமாய் நாடகத்தின் தலையில் ஏற்றி, நாடகத்தமிழே தீது என்று கடிதல் எவ்வாறு ஏற்புடைத்தாகும்? காரணம் ஒரு புறத்தில் இருப்ப, அதனைக் கண்டு பரிகரிக்கமாட்டாது மயங்கிக் காரணமல்லாதவற்றைக் காரணம் என்று கூறுதல் தருக்கநூற்குற்றம் அன்றே?

" நீயுந் தவறிலை; நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்;
நிறைஅழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறைஅறைந் தல்லது செல்லற்க என்னு
இறையே தவ(று)உடை யான்!"

என்று குறிஞ்சிக்கலியிற் கூறியதனை ஒக்கும் இவரது செயல். இது நிற்க.

சென்ற சில்லாண்டுகளாக நாடகத்தமிழ் அறிவுடையோர் சிலரது உதவி கொண்டு தலையெடுத்து வளராநின்றது. இதற்கு வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப் பயிற்சியும் மிகப் பயன்படுவனவாயின. இவ்வாறு புது வழியிற் புனையப்பட்டு வெளிப்படும் நாடகங்கள், இன்னும் அதிகரித்தல் வேண்டும். இவற்றை ஒழுங்குபடுத்துதல் கருதி, யாம் '**நாடக இயல்**' என்றதோர் இலக்கண நூல் செய்திருக்கின்றனம்.

இனிச்சிலர், '**நாடகம்**' என்ற சொல் வடசொல்லாதல் கண்டு, 'ஆரியரோடு கலந்த பின்னரே தமிழர்களிடத்தில் நாடகத்தமிழ் ஏற்பட்டிருத்தல் வேண்டும்,' என்கின்றனர். இக்கூற்று, வடமொழியில் '**வாய்**' என்பதற்குத்தக்க சொல் இல்லாமையால், 'வடமொழியாளர்க்கு வாய் இல்லை,' என்பது போலும்! அஃதன்றியும், '**கூத்து**' என்ற சொல்லே ஆதியில் தமிழர்கள் வழங்கியது; கூத்து என்பது பொது; நாடகம் என்பது சிறப்பு. கூத்துப் பலவற்றினுள் நாடகம் என்பது கதை தழுவி வரும் கூத்து. எனவே, நாடகம் என்ற சொல் வழக்கின் முன்னரே, நாடகத் தொழில் வழக்கும் நாடக நூல் வழக்கும் தமிழர் மாட்டு உண்டு என்பது பெற்றும்.

# 3. சீவராசிகளின் இலக்கணமும் பிரிவும்

[பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, M.A.]

நம்மாலறியத்தகும் பதார்த்தங்களெல்லாம் கல், மண் முதலான உயிரில் பொருள்களும், புல், பூண்டு, புள், விலங்கு முதலான உயிருள் பொருள்களும் என்ற இருபெரும்பிரிவிற்குள் அடங்குமென்பது யாவருமுணர்ந்த விஷயம். உயிரில் பொருள்களையும், உயிருள் பொருள்களையும் ஆதியோடந்தமாக ஒத்து நோக்கி, அவற்றிற்குள்ள வேற்றுமையை நிர்ணயித்து, உயிர் அல்லது ஜீவனென்பதன் இலக்கணம் இன்னதுதானென்று வரையறுத்து நிலைநிறுத்தல் நுண்ணிய சாஸ்திரப்பயிற்சி உடையவர்க்கும் அரிதான காரியமாய் இருக்கின்றது. ஆயினும், நமது நித்தியானுபவத்தில் நாம் கையாடுகின்ற பொருள்களுள் உயிருள்ளவை இவை எனப் பொதுவாகப் பகுத்தறிந்துகொள்கிறோம். இவ்விதம் நாம் நமது தினசரியில் காணும் ஜீவராசிகளையும் ஜடராசிகளையும் பிரித்துணரும் குறிப்புகளைச் சற்று உற்றுணர்ந்து பார்த்து, அவற்றின் வேறுபாடுகளை விளக்கும் இலக்கணங்களைச் சிறிது நிதானிப்போமாக :

இங்ஙனம் பார்க்கையில் ஜீவராசிகளுக்குரிய பல இலக்கணங்களுள் மூன்றிலக்கணம் யார்க்கும் எளிதில் புலப்படத்தக்கனவாயிருக்கின்றன. அவையாவன :

1. **அவயவீபாவமானசரீரம்**; அதாவது, உறுப்போடு அமைந்த உடம்பு.
2. **விருத்தி க்ஷயம்** ; அதாவது, வளர்தல் கெடுதல்.
3. **பிரத்தியுத்பாதநம்** ; அதாவது, தன்னைப் போன்ற பிரதிநிதி சமைத்தல்; அல்லது பிறகிளையாக்கம்.

பிரஜையற்றவனுக்கு எப்படி **ராஜா** என்னும் நாமம் வரமாட்டாதோ, பிள்ளையற்றவனுக்கு எப்படித் **தந்தை** என்னும் பெயர் கிடைக்காதோ, அப்படியே உயிரில்லாவிடில்

**உடம்பு** என்ற வேற்றுமைத் தோற்றம் பிறவாது. உடம்பு என்பது, உறுப்புக்களால் ஆக்கப்பட்ட யாக்கை. ஒரே பொருள் பல பாகங்களாகப் பிரிக்கப்படும்படி இருக்கவும், அப்படிப் பிரிக்கப்படும் பாகங்களுக்குத் தனித்தனி வெவ்வேறு தொழில்களும், அத்தொழில்களுக்கேற்ற கட்டுப்பாடு குணம் முதலியவையுமிருக்கவும் செய்தால், அப்பாகங்களில் ஒவ்வொன்றும் உறுப்பு அல்லது அவயவமெனப் பெயர் பெறும். அவ்வுறுப்புக்கள் இயற்றும் தொழில்கள் பலவற்றையும் ஒருமைப்படுத்தி அனுபவிக்கும் சமூகத்திற்கே உடம்பு, யாக்கை, அல்லது சரீரம் என்னும் பெயர் உரியதாகும். இதனைச் சோதித்தறிய விரும்புவோர், மரவர்க்கத்தில் ஏதேனுமொன்றை எடுத்துப் பார்ப்பாராகில், அதற்கு வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய் முதலிய பல உறுப்புக்கள் அமைந்து கிடப்பதையும், அவற்றில் ஒவ்வொன்றும் வெவ்வேறான வடிவு, பண்பு, கட்டு, தொழில் முதலியவற்றைப் பெற்று நிற்பதையும், அவ்வவயவங்கள் அனைத்தையும் தன்னுளடக்கி அவற்றின் செய்தொழில் பயனை அனுபவிக்கும் மரமாகிய சமூகம், அவயவீபாவமடைந்து சரீரமென்னும் பெயர்க்குரித்தாய் விளங்குவதையும் காண்பார்கள். இப்படியே ஆடு, மாடு, நாய், நரி முதலிய மிருகங்களைக் குறித்து யோசிக்கையிலும், அவற்றின் கண், செவி, கை, கால் முதலிய வெளியுறுப்புக்களும், அன்னாசயம், இரத்தாசயம், பித்தாசயம் முதலிய உள்ளுறுப்புக்களும், அவற்றின் வெவ்வேறும் உருவம், குணம், விதானம், வியாபாரம் முதலியனவும், அவ்வவயவங்களின் சமஷ்டியாகிய உடம்பின் நிலைமையும் காணலாகும்.

நாம் கூறிய உயிர்களின் இரண்டாம் இலக்கணம் விருத்தி க்ஷயம் அல்லது வளர்தல் கெடுதல் எனுங்குணமாம். இக்குணம் உயிரில்லாத பூத பௌதிகங்களுக்கும் அவற்றால் நாம் உண்டுபண்ணும் எவ்வகைக் கருவிகளுக்கும் பொருந்துவதன்று. அறியாதார், பாறைக்கற்கள் வளர்ந்து வருகின்றனவென்று மயங்குவர். அத்தோற்றத்திற்குக் காரணம், அக்கற்களைச் சுற்றியிருக்கும் மண் முதலியன மழையாதியால் சிறிது சிறிது நீங்கி, அப்பாறைகள் காலக்கிரமத்தில்

அதிகரித்து வெளிப்படுதலேயாம். இஃதன்றியும், அக்கினி-பர்வதாதி ஏதுக்களாலும் அத்தோற்றம் உண்டாகுமென்பது பௌதிக சாஸ்திரப் பிரசித்தம். உண்மையில் வளர்தல் கெடுதலென்பன ஆகார ஸ்வீகாரத்தின் பயனுகவே இருக்-கின்றன. நமது கொல்லையிற் பயிரிடும் கத்தரி, பாகல், கீரை முதலிய மரவர்க்கங்களெல்லாம் நீர் பாய்ச்சப்பட்டா-விடில் வாடிச் சோர்வதையும், நீர் பாய்ந்த போது தழைத்து வளர்வதையும் அறியார் யார்? இவைகள் யாவும் வேரினுல் மண்ணிலுள்ள சில பௌதிகங்களையும், இலை முதலிய-வற்ருல் காற்றிலுள்ள சில பௌதிகங்களையும் எல்லா அங்கங்-களாலும், விசேஷமாய் வேரினுலும் நீரையுமுட்கொண்டு அவ்விதம் தங்களுக்குக் கிடைத்த பொருள்களைத் தத்தமக்கு வேண்டிய பகுதிகளாக மாற்றித் தம்முறுப்பையும் உடம்-பையும் வளர்த்துக்கொள்ளுகின்றன என்பது, கவனித்தால் யாவர்க்கும் புலப்படக் கூடியதே. இப்படிச் சீவராசிகள் வெவ்வேறு பூத பௌதிகங்களை உட்கொண்டு அவற்றைத் தங்கள் சரீரத்தோடு அபின்னமாகக் கலப்பிக்கும் தொழிற்கே ' **ஆகார ஸ்வீகாரம்** ' அல்லது ' **உண்ணல்** ' எனும் பெயர் அமையும்.

' பிரத்தியுத்பாதந சக்தி ' அல்லது ' பிற்கிளையாக்கம் ' என்பது, சீவராசிகள் தங்கள் தங்களுடம்பிலிருந்து தம்மைப்-போல் உறுப்புக்கள் அமைந்த தம் சாதி உயிர்களை உண்டு-பண்ணும் வல்லமைக்குப் பெயராம். இது மிருகவர்க்கத்துக்-கன்றி மர வர்க்கங்களுக்கும் பொதுவான இலக்காயுண்டாத-லெல்லாம் இதன்பொருட்டே. ஒரு கல் ஆயிரந் துண்டுபட உடைந்து தன்னைப் போன்ற உருவும் குணமுமுடைய பலவாய் உற்பவிப்பதற்கும், பிற்கிளையாக்கத்திற்கும் உள்ள பெருவேற்றுமை எடுத்துக்காட்டாமலே புலப்படக் கூடிய-தன்றோ?

ஒரு கல்லானது தனது பூர்வ ஸ்திதியை இழந்தன்றிப் பல கற்களாகாது. மேலும், பலவாய்ச் சிதறிய கற்களுள் ஒவ்வொன்றும் முன் ஒன்றுயிருந்த கல்லைப்போலப் பருத்துப் பின்னும் இப்படிப் பலவாதற்குக் கூடியதுமன்று. ' நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங் காலத்துக் கொண்ட கருவீ-

னுங் கொள்கைபோல்' சில உயிர்கள் பிற்கிளையாக்கத்தால் தம் உடலழிவது இயல்பே; ஆயினும், அப்பிற்கிளைகள் காலக்கிரமத்தில் வளர்ந்து, ஒன்று பலவாகத் தாமும் பெருகு-வதனுல், இவற்றின் பிரத்தியுத்பாதநத்திற்கும் கல்லுடைத-லுக்கும் வேறுபாடு பெரிதாம். இம்மூன்று இலக்கணங்களில் ஒவ்வொன்று சிற்சில இடங்களில் புற நடையாகப் பிற-பொருள்களுக்குக் காணப்படுமாயினும், மூன்றிலக்கணமும் ஒன்ருகப் பொருந்துவது சீவராசிகளிடத்து மாத்திர-மேயாம்.

# 4. கோவூர் கிழார்

[பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனூர் அவர்கள்]

" மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவரும் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநாட் டின்கண் "

அதன் கண் போல விளங்கிய கோவூர் என்னும் ஊரிலே, இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வேளாளகுல திலகராய் விளங்கிய சான்ருேர் ஒருவர்க்கு, அவரும் தமிழகமும் செய்த தவப்பெரும்பயனுய்க் கோவூர் கிழார் என்னும் புலவர் பெருமான் தோன்றினுர். இவரை மகவாகப் பெறும் தகவுடையவரான தந்தையார், உரிய பருவத்தில் இவரைப் பள்ளிக்கு வைத்துக் கல்வி பயில்வித்தார். இவரும் நாடோறும் காலத்தே பள்ளிக்குச் சென்று, ஆசிரியரை அணுகி வழிபாடு செய்து, அவரது குறிப்பின் வழி ஒழுகி, மடி, தடுமாற்றம், மானம், மறதி இல்லாது, ஆசிரியர் 'இரு' என இருந்து, 'சொல்' எனச் சொல்லி, அவர் உரைப்பனவற்றையெல்லாம் விடாது உள்ளத்திலமைத்து, விடாய்த்தவர்க்கு நீரிலுள்ள வேட்கை போலக் கல்வியில் வேட்கை மிகவுடையவராய்ப் பழம்பாடம் போற்றியும், தம்மோடு கற்கும் பிறரோடு வினவியும், அவர் வினயதற்கு விடையிறுத்தும், தாம் கற்றவற்றைப் பிறர்க்கு எடுத்து அறிவுறுத்தியும், உத்தம மாணுக்கர்க்குரிய குணங்கள் அத்தனையும் வாய்த்து, இலக்கிய இலக்கணத் துறைகள் அனைத்திலும் சென்று, ஐயம் திரிபறக் கற்ருர். இங்ஙனம் கற்க வேண்டிய நூல்களையெல்லாம் கற்றுப் புலத்துறை முற்றிய புலவர், சொற்சுவை பொருட்சுவை முதிர்ந்த கவிகள் இயற்றும் வன்மையுற்று, நல்லிசைப் புலவர் வரிசையில் வைத்துச் சொல்லும் பெருமை பெற்று, விரிந்த சிந்தையும், பரிந்துருகும் தயாளமும், அற்புதமான செல்வாக்கும்,

அரசர்க்குச் செவி கைப்ப இடித்துரைக்கும் ஆற்றலும் பொருந்தி, இலகு நூலறிவோடு உலகியல் அறிவும் அரசியல் அறிவும் சாலப் படைத்துத் தோலா நாவின் மேலோராய் விளங்கினர். இவரால் இவர் பிறந்த கோவூர், தேவரும் விரும்பும் மேவருஞ்சிறப்புற்றுத் திகழ்ந்தது. அது பற்றி யாவரும் இவரை இவரது இயற்பெயரால் வழங்காது, **கோவூர் கிழார்** எனவே வழங்குவாராயினர்.

அக்காலத்துச் சோழநாட்டிற் சோழ பரம்பரையில் தோன்றி, அரசர்க்குரிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கங்களில் எஞ்சாது, பல நற்குணங்களும், நல்லொழுக்கமும், புலவர் பாடும் புகழும் உடையவனுய்ச் **சோழன் நலங்கிள்ளி** என்பான் விளக்கமுற்றிருந்தான். அவன் கோவூர் கிழாரது அரிய புலமைத் திறத்தினையும், உலகியல் ஞானப்பரப்பையும் கேள்வியுற்று, " 'மனந் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும், இனந்தூய்மை தூவா வரும்,' என்பர் ஆன்றோர். அருட்பெருங்குணமே ஓருருவெடுத்தாலனையார் கோவூர் கிழார் ; அப்பெரியாரை என்று தலைக்கூடுவேன் ? என்று பீடு பெறுவேன் !" என்று இங்ஙனமெல்லாம் எண்ணி, அவர்பால் அன்பு மீதூரப் பெற்றவனுய், அவரைத் தன் அவைக்களத்துக்கு அழைத்தான். புலவரும், தம் போன்ற புலவரது அருமை பெருமைகளை அறியும் அறிவு மிகுந்த அவன்பாற்செல்லுதற்கு விழைந்து, அவனது அவைக்களத்தை அடைந்தார். அன்று முதல் இருவரும் கலந்த அன்பும் நண்புமுடையவராயினர். புலவர் அரசனது மாட்சியெல்லாந் தெரிந்து, அவனது வீரம், நியாயம், தியாகம் முதலியன விளங்க எடுத்துக்காட்டான பாட்டுக்கள் பல தொடுத்து, அவனை மகிழ்ச்சியுட்படுத்துவாராயினர்.

இங்ஙனம் இவர்கள் உழுவலன்பு பூண்டு ஒழுகும் நாளில், சோழர் குடியிலே பிறந்தவனுகிய **நெடுங்கிள்ளி** என்பவனுக்கும், இந்நலங்கிள்ளிக்கும் சோழநாட்டு அரசுரிமைபற்றிப் பெரிய வழக்குகள் பல நடந்து, அவை தீராது பகை மூண்டு, இருவர்க்கும் பலவிடங்களில் பெரும்போர் பல நிகழ்ந்தன. அங்ஙனம் நிகழ்ந்த போது ஒரு முறை நெடுங்கிள்ளி, நலங்கிள்ளியோடு எதிர் நின்று பொருதற்கு

ஆற்றுணைப் போய்ச் சோணாட்டு ஆவூர்க்கோட்டையைத் தனக்கு அரணாகக் கொண்டான். அதனை அறிந்த நலங்கிள்ளி, அக்கோட்டையைத் தன்னகப்படுத்தக் கருதிப் பெருத்த சேனையோடு வஞ்சி சூடி மேற்சென்று, உழிஞை சூடி மதிற்புறத்தை வளைத்துப் பெருஞ்சமர் புரிந்தான். நெடுங்கிள்ளியோ, நொச்சி சூடி மலைந்து மதிலைக் காவாது, மதிலினை அடைத்துக்கொண்டு மனமொடுங்கி வாளா ஒரு புறத்தொதுங்கி இருந்தான். முற்றுகையோ, பன்னாள் நீடித்தது. மதிலகத்து நீரும் உணவும் முதலான ஏமப்பொருள்கள் சுருங்கினமையால், உள்ளிருந்த படைஞர்களும், மக்களும், பிறவும் கூறவொண்ணாத் துயர்மீக்கூர்ந்தனர்.

இத்தகைய கொடுமையான நிகழ்ச்சியை அறிந்தார் நம் புலவர். அருள் வெள்ளம் பெருகும் இவரது உள்ளம் இதனைப் பொறுக்குமோ? உடனே புலவர் விரைந்து வந்து, அடைத்துக்கொண்டிருக்கும் நெடுங்கிள்ளிக்குத் தமது வருகையை உணர்த்தி உட்சென்று, அவனைக் கண்டார்; கண்டு, சோழனை நோக்கி, " அரசே, யானைகளெல்லாம் குளத்திற்படிந்து குளியாமலும், நெற்கவளம் முதலியவற்றைப் பெறாமலும், கம்பங்களைச் சாய்த்து நிலத்தின்மேற் புரளும் கையையுடையனவாய்ப் பெருமூச்சு விட்டுச் சுழன்று இடிபோல முழங்கவும், பால் இல்லாமல் குழந்தைகள் அழவும், மகளிர் பூக்களால் தங்கள் கூந்தலை அலங்கரியாமலிருக்கவும், குடிகள் எல்லாம் தண்ணீரும் இல்லாத தங்கள் வீடுகளிலிருந்து வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக் கேட்கவும் இவற்றிற்கெல்லாம் நாணாமலும் இரங்காமலும் இவ்விடத்து நீ இனிதாக இருத்தல் சாலக் கொடியதாகும்! வலி மிக்க குதிரைப் படைகளையுடைய தோன்றலே, நீ உண்மையாக அறத்தையுடையையாயின், உனது குலத்தவனும் இப்போது பகைவனுமாயிருக்கிற இவன் முன்னிலையில், ' இக்கோட்டை உன்னுடையதன்றோ?' என்று சொல்லித் திறத்தல் செய்வாயாக; அன்றி, வீரமுடையையாயின், போர் செய்து வென்று விரைவில் திறப்பாயாக. நீ இவை இரண்டுமின்றித் திறவாமல் அடைக்கப்பட்ட திண்ணிய கதவினையுடைய பெரிய

மதிலுள் ஒரு பக்கத்தே ஒதுங்கியிருத்தல் மிகவும் நாணும் தன்மையுடையது!'' என்னுங் கருத்துப்பட,

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்(து)
அலமரல் யானை உருமென முழங்கவும்,
பாலில் குழவி அலறவும், மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்,
இன்னா தம்ம ஈங்கினி திருத்தல்!
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்!
அறவை யாயின், நினதெனத் திறத்தல்;
மறவை யாயின், போரொ டுதிறத்தல்;
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.''

என்னும் அருள் வெள்ளம் ததும்பும் ஒரு பொருள் பொதிந்த பாடலைக் கூறினர். கூறலும், இஃது அவனது உள்ளத்திற்சென்று பெருகிற்று. உடனே அரசன் அடைமதிலைத் திறந்துவிட்டு, உறையூர் போய் அரண் செய்து, உள்ளிருந்தான். நலங்கிள்ளி, ஆவூரைக் கைப்பற்றிக்கொண்டான்.

இங்ஙனம் ஆவூர்க் கோட்டையை முற்றுகை செய்து கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளிபால், **இளந்தத்தர்** என்னும் பெயர் வாய்ந்த புலவரொருவர் வந்து, பரிசில் வேண்டிப் பெற்றுக்கொண்டு, பின்னர் உறையூர் போய் நெடுங்கிள்ளியை அடைந்து, பரிசில் வேண்டினார். அப்புலவரை நெடுங்கிள்ளி, "இவன் உண்மைப் பரிசிலாளன் அல்லன்; நம் பகைவனாகிய நலங்கிள்ளியிடமிருந்து இவ்விடத்து இரகசியங்களை அறிந்து போதற்கு வந்த ஒற்றனேயாவன்,'' என்று பிழைபடக் கருதிப் புலவரைக் கொல்லுதற்குத் துணிந்தனன்; இக்கொடுஞ்செயலைக் கேள்வியுற்ற புலவர் பெருந்தகையாம் கோவூர் கிழார், விரைந்து சென்று, புலவரை உயிர் இறுதியினின்றும் உய்விக்கக் கருதி, உறையூர் புகுந்து, அரசனையணுகி, "அரசே, இப்புலவர் விஷய-

மாக நீ கொண்ட கருத்துப் பிழைபட்டதும் அனியாய-மானதும் ஆகும். இவர் பகை வேந்தரிடமிருந்து ஒற்று வந்தவரென்று கருதற்க; புலவரது வாழ்க்கை வஞ்சங்கல-வாப் புனிதமுடையது என்பதனை நீ அறிந்திலையோ?

"வள்ளல்களாயுள்ளவர்களை நினைத்துப் பழுத்த மரங்-களை நாடிச் செல்லும் பறவைகள் போலச் சென்று, கடந்து செல்லுதற்கரிய வழிகளைத் தூரமென்று கருதாமற்கடந்து, தம் நாவால் இயன்ற அளவு பாடி அங்கே பெற்ற பரிசிலால் மகிழ்ந்து, தம் சுற்றத்தாரை அவற்றைக்கொண்டு உண்பித்-துத் தாமும் உண்டு, பொருளில் பற்றின்றி உள்ள மலர்ச்சி-யோடு பிறர்க்கும் கொடுத்துத் தம்மைப் பாதுகாக்கும் செல்-வராற் பெறும் சிறப்பு ஏதுவாக வருந்தும் இப்பரிசிலால் வாழும் வாழ்க்கை, தம்மோடு கல்வி முகத்தால் போர் நிகழ்த்த வருவாரோடு சொற்போர் நிகழ்த்தி அவர் நாணத் தம் கல்வி-யால் வென்று, அதனால் வரும் பெருமிதத்தோடு தலை-யெடுத்து நடந்து, இனிதாக ஒழுகும் அவ்வளவன்றிப் பிறர்க்கு ஏதேனும் கொடுமை செய்தலை அறிந்ததோ? இல்லை; இஃதன்றியும், அரசாளும் செல்வமுடைய உங்களைப் போன்ற பெருமையுமுடையதாகும்," என்று, புலவர்களின் வாழ்க்கை நலத்தை அரசனது உள்ளத்திற் பதியுமாறு சாதுரியமாய்க் கூறி, அவனது தீய எண்ணத்தை மாற்றி, இளந்தத்தர் என்னும் அப்புலவரை உய்வித்தார்.

புலவர் உறையூரில் இம்மகோபகாரச் செயலைப் புரிந்து அமைந்திருக்குங்கால், ஆவூரைக் கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளி, நால்வகைப் படையுடன் போந்து, உறையூரை-யும் முற்றுகை செய்து, பெரும்போர் தொடங்கினான். இதனை அறிந்த அருள் வடிவினரான புலவர் சிகாமணி, ஒரு குடி-யிற் பிறந்தும் அன்புரிமையின்றிச் செற்றம் பூண்டிருக்கும் அவர்கள் தன்மைக்கிரங்கி, மனம் பொறாமல், 'எவ்வாற்றா-லேனும் இவருடைய பகைமையையொழித்து, ஒற்றுமைப்-படுத்துவேன்!' எனத் தம்முட்கருதி, அடைத்தும் முற்றியும் நிற்கும் அவ்விரு வேந்தரிடமுஞ் சென்று, அவர்களை நோக்கி, "அரசர்களே, பகைத்து நிற்கும் உம்மிருவருள் ஒருவனும் பெரிய வெண்மையான இதழையுடைய பனம்பூ

மாலையை அணிந்தவனல்லன் (சேரன் அல்லன்); அல்லது கரிய கிளைகளையுடைய வேம்பு மாலையை உடையவனல்லன் (பாண்டியனல்லன்); உன்னுடைய மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது; உன்னுடன் பொருவோனது மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது. (நீவிர் இருவீரும் சோழரே.) ஆதலால், உங்களுள் எவர் தோற்ருலும், தோற்பது உங்கள் குடியேயன்றி வேறன்று; இருவரும் வெல்லுதல் என்பதோ, உலகத்தியற்கையன்று. இவற்ருல் உங்கள் செய்கை குடியின் பெருமைக்குச் சிறிதுந் தக்கதேயன்று; அன்றியும், இந்த யுத்தம் உங்களைப் போன்ற பெருவேந்தர்களாயுள்ள ஏனையோர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும்; ஆதலால், இனி இப்போரை அறவே விட்டொழியுங்கள். இதுவே உமக்குத் தக்கதாகும்,'' என்னும் பொருள்பட,

“ இரும்பனை வெண்டோடு மலைந்தோன் அல்லன் !
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன் ;
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ; நின்னெடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ;
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே ;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே ; அதனுற்
குடிப்பொரு ளன்றுநும் செய்தி ; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.”

என்று தமது விரிந்த சிந்தையிற் சுரந்தெழுந்த பாட்டினுல் உண்மையைப் பசுமரத்தாணி போல இருவருள்ளத்தும் பதியக் கூறி, அவருள் நெடுக நிகழ்ந்து வந்த செற்றத்தை நீக்க முற்பட்டனர். அதனைக் கேட்ட அரசர் இருவரும் இத்தகைய புலவர் பொருளுரையைப்போற்றி, அதன் வழிநின்று பகைமை நீங்கி, அன்பு கலந்த உள்ளத்தராகாது, மறுத்துரைக்கவும் ஒருப்படுவரோ? புலவர் கூறியவாறே இருவரும் போரொழிந்தனர்.

பின்பு நலங்கிள்ளி புலவரது அருட்பெருங்குணத்தினையும், பிறர்க்கெனவே முயலும் பெற்றியையும், வெள்வேலேந்தும் வேந்தராயினும் அவரிடம் உண்மையை அஞ்சாது கூறும் ஆற்றலையுங் கண்டு வியந்து, ‘பெறுதற்கரிய இத்தகைய பெரியோர் நட்பைப் பெறுதற்கு யான் செய்த புண்-

ணியம் என்னையோ!' எனப் புகழ்ந்து கூறி, புலவர்பால் முன்னையினும் பன்மடங்கதிகமான நண்புரிமை கொண்டான். அது முதல் அரசன் புலவருடன் இடையருது பழகிப் புலவரது திட்பமிகுந்த நட்பென்னும் புணையால் தமிழென்னும் அளப்பருஞ்சலதியைக் கரை கண்டவனாய், அமிழ்தென்னும்படியான கவிகள் பலபாடும் வன்மையுற்று, புவியரசாதலோடு கவியரசாயும் விளங்கினான். புலவரும் வள்ளியோனாகிய நள்ளியினது தமிழ்மொழிப்பற்றையும், பெருங்குணத்திறனையும் கண்டு அன்புமிகப் பெற்று, அவ்வப்போது அவனது பெருந்தகைமைகள் பொருந்தத் திருந்திய பாக்கள் பல பாடுவாராயினர்.

ஒருகால் புலவர், “சிறப்புடைய முறைமையால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றுங் காட்சி போல, நின்னால் வெல்லப்பட்ட சேர பாண்டியருடைய இரண்டு குடையும் பின்னே வர, முன்னே ஓங்கிய உனது ஒப்பற்ற வெண்கொற்றக் குடை, பூரண சந்திரன் போல உயர்ந்து தூரத்தினும் விளங்கப் புகழை விரும்பிப் போரைச் செய்யும் பாடி வீட்டின்கண்ணே இருத்தலல்லது உன் நகரின்கண் இருத்தற்கு உடம்படாய் நீ. கோட்டின் நுனி தேயும்படி பகைவர் மதிலைக் குத்தும் உன்னுடைய யானைப்படைகள், அடங்காத செருக்கையுடையனவாயிருக்கின்றன; போரென்று கேட்டால் மிக விரும்பும் உன் படை வீரர்கள், ‘பகைவர் தேயம் நெடுந்தூரத்தது; ஆதலால், ஆண்டுப் போவோம் அல்லோம்,’ என்று கருதாது, செல்லுதற்கு முனைந்த உள்ளமுடையவர்களாயிருக்கின்றார்கள். ஆதலால், ஓசை மிகுந்த பல விழாவினையுடைய பகைவர் நாட்டில் தங்கிவிட்டுக் கீழ்க்கடல் பின்னதாக மேற்கடலினது திரை உன் குதிரைகளின் குளம்பை நனைக்கும்படி வலமாகப் படைகளை விட்டுத் தங்கள் நாட்டுக்கும் நீ வருதல் கூடுமென்று மனஞ்சுழன்று நடுங்கித் துன்பம் மிகுந்து இருக்கிறார்கள் வடநாட்டு வேந்தர்கள்,” என்று நலங்கிள்ளியின் போர் விருப்பத்தையும் அவனது படையெடுப்பில் வடநாட்டாருக்குள்ள அச்சத்தையும் வியந்து கூறினார்.

பின்பொருகால் இவர், “நமது சுற்றத்தினது உணவிற்கு

விலையாகச் சேரனது **வஞ்சி மாநகரத்தை** அளிப்பன்; அழகிய நம் விறலியர் சூடும் பூவிற்கு விலையாகப் பாண்டியனது **மாட மதுரையையும்** தருகுவன்; இந்நிலவுலகத்தின் உரிமையை ஆராய்ந்து கூறினால், இந்நாடு, குயக்குலத்தினளுர் கலம் வனைதற்குச் சக்கரத்தில் வைத்த பச்சை மண் திரள் போல, அவனது கருத்தின் முடிபையுடையதாயிருக்கின்றது; ஆகையால், நாமெல்லாம் அவனையே பாடுவோமாக; வாரீர், பரிசின்மாக்காள்!'' என்று கூறுமுகத்தான் அவனது வரையா வள்ளன்மையையும் தலைமையையும் பாராட்டிக் கூறினர்.

மற்றுமொரு முறை, அவ்வரசன் சேர பாண்டியரது நாட்டைத் தன்னடிப்படுத்திய ஆற்றலையும் பாண்டியனது ஏழ் அரண் கதவுகளை அழித்து அங்குத் தனது புலிக்கொடியைப் பொறித்த மிகுதிப்பாட்டையும், போர்க்களத்தில் பாணர்க்கு உணவருத்தும் சிறப்பினையும், அவனது அறக்கள வேள்வி மறக்கள வேள்விகளையும் சிறக்கக் கூறினர் (புறம்–33).

இங்ஙனம் புலவரும் நலங்கிள்ளியும் விள்ளா நட்புப் பூண்டு விளங்குகையில், இந்நலங்கிள்ளியின் தமையனும் காவிரிப்பூம்பட்டினத்தை அரசாண்டுகொண்டிருந்தவனுமான **சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்** என்பான், கடையெழு வள்ளல்களுள் ஒருவனும்—திருக்கோவலூர் அரசனும்—புலவர்க்குப் பரமோபகாரியும்—**கபிலர்** முதலிய நல்லிசைப் புலவர்களால் நாவார மனமாரப் புகழ்ந்து பாராட்டப்பட்டவனுமான **மலையமான் திருமுடிக்காரியின்**மீது தான் கொண்டிருந்த பகைமை காரணமாக அவனுடைய மிக இளமையான மக்கள் இருவரைக் கைப்பற்றிக்கொணர்ந்து, யானையால் இடறும்படி செய்து கொல்லக் கருதினன். இதனைக் கேள்வியுற்ற கோவூர் கிழார், பரிபவமிகுந்து, அருமந்த குழந்தைகளைக் காப்பதற்கு ஆங்குக் காற்றினும் கடுகிச் சென்று, அரசனைக் கண்டு, ''அரசே, நீ ஒரு புருவுக்காகத் துலாக்கோல் புகுந்து அதன் உயிர்த் துன்பத்தைத் தீர்த்ததன்றியும் பிற உயிர்களுக்குற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்தருளிய **சிபி** என்னும்

அரசர் பெருந்தகையின் மரபிலே உதித்தவன். இச்சிறுவர்களோ, அறிவால் உழுதுண்ணும் புலவரினது வறுமையைக் கண்டால் வருந்தி அதைத் தீர்ப்பதற்குத் தம் செல்வங்களைப் பகுத்துக் கொடுத்துண்ணும் தண்ணளியுடையவராய் வாழ்வாரது மரபிற்பிறந்தவர்கள். இவர்கள் இந்த யானையைக்கண்டு இயற்கையில் அஞ்சி அழுகின்ற அழுகையும் மறந்து நிற்கும் பச்சிளங்குழந்தைகளாய் இருக்கின்றார்கள்; அஃதன்றியும், இக்கூட்டத்தை அச்சத்துடன் பார்த்து, முன்பு தாங்கள் அறிந்திராத புதிய வருத்தத்தையுடையவர்களாயுமிருக்கின்றார்கள். யான் கூறிய இவ்விஷயங்களை நீ உள்ளபடி கேட்டறிந்தவனாயின், இனி நீ விரும்பியதைச் செய்வாயாக,'' என்று இங்ஙனம் கல்லும் மரமும் கரைந்துருகக் கூறினார்; கூறவே, அரசன் புலவரது அருளுரையைக் கேட்டுத் தன் கொடுஞ்செயலுக்கு நாணி, குழந்தைகளைக் கொல்லாது விடுத்தனன்.

பின்னர்ப் புலவர், இங்ஙனம் தம் பொருளுரையால் தெருண்டு அருள் நிரம்பியவனான அவ்வரசன் திறத்தை வியந்து, "கூற்றுவனும் தன்னால் உயிர் கொள்ளுதற்கேற்ற காலம் வருமளவும் எதிர் பார்த்திருப்பான்; அவ்வாறு காலம் பாராது பகையரசர் மாளும்படி வேண்டும் இடத்தே கொல்லும் வெல்லும் போரையுடைய வேந்தே, எட்டுத் திக்கிலும் எரிகொள்ளி எரிந்து விழவும், மரங்களின் கிளைகள் இலை உதிர்ந்து வாடவும், சூரியன் பல இடங்களில் தோன்றவும், அஞ்சத் தக்க பறவைகள் குரலிசைப்பவும் இவற்றை நனவிற் கண்டும், பல் நிலத்தில் விழவும், எண்ணெயைத் தலையில் வார்க்கவும், ஆண் பன்றியில் ஏறவும், ஆடையைக் களையவும், படைக்கலம் இருந்த கட்டிலுடன் கவிழவும் இவற்றைக் கனவிற்கண்டும், இவை பற்றித் தவிராது போர்க்குச் சென்று தவறாது வெல்லும் வலியுடையையாதலால், உனது படையெடுப்பைக் கருதிப் பாதுகாவலின்மையால் அஞ்சி வருத்தமுற்றுத் தம் பிள்ளைகளுடைய பூப்போலுங் கண்களை முத்தம் செய்து தம் மனைவியர்க்குத் தம் வருத்தந் தோன்றாமல் மறைக்கும் ஆடவரோடு கலக்கமடைந்து, உன்னைக் கோபிக்கச் செய்த பகைவர் நாடு,'' எனவும்; "'தேன்

போன்ற இனிய நரம்புத் தொடை பொருந்திய சிறிய யாழையுடைய பாணரே, குளத்தின்கண் வாழும் ஆமையை இருப்புச் சலாகையில் கோத்தாற்போன்ற நுண்ணிய கோலால் பிணிக்கப்பட்ட தெளிந்த கண்ணையுடைய உடுக்கையோசை இனிதாகவிருக்கும்; அதனைக் கேட்டு இவ்விடத்துச் சிறிது தங்கி இளைப்பாறிப் போவீராக,' என்று சொல்லிப் பல விஷயங்களைப் பற்றி என்னை வினவுகின்ற இரவலனே, யான் சொல்வதனைக் கேட்பாயாக: தை மாதத்துக் குளிர்ந்த பொய்கை போலக் கொள்ளக்கொள்ளக் குறையாத சோற்றையுடைய பெரிய நகரத்தையும், அடுநெருப்பையல்லாது சுடுநெருப்பை அறியாது இரு மருந்தாகிய சோற்றையும் நீரையும் மிகுதியாக உண்டாக்கும் நாட்டையுமுடையவனாகிய கிள்ளி வளவனது நல்ல புகழை நினைத்து, வண்டுகள் சிறு வெள்ளாம்பற் பூக்களில் ஊதிக்கொண்டிருக்கப்பெற்றதும் வள்ளியோனாகிய **பண்ணனது**மாகிய **சிறுகுடி** வழியாக நினது விறலியோடு மெல்ல மெல்ல நடந்து செல்வையாயின், பெருஞ்செல்வத்தைப் பெறுகுவை. அவனது வண்மையால் செல்வம் பெறுதல் விறகு வெட்டிகள் விழுப்பொருள் எடுப்பது போன்ற அருமைப்பாடுடையதன்று. 'அது பெறுவேமோ?' என ஐயுற வேண்டா,'' எனவும் கிள்ளி வளவனது திண்மை, வண்மை, தண்மை, உண்மை முதலிய பெருங்குணங்களைப் புலப்படுத்திப் பாடினார். பின்னரும் அவனது பாணர் பசிக்குப் பகையாயிருக்குந் தன்மையையும், மருதம், முல்லை, நெய்தல் நில வளங்களையும் வருணித்துப் பாடி உவப்பித்து, அவன் அவையில் தங்கியிருந்தார். சின்னாட்கழிந்ததும் புலவர், தம் நண்பனான நலங்கிள்ளியைக் காண வேண்டும் என்னும் அவா ஈர்க்க, அரசனிடம் விடை பெற்று உறையூர் வந்து, நலங்கிள்ளியை இருவிழிகள் குளிரக் கண்டு, உவகை கொளத் தழுவி, அளவளாவி, அவனது பகை வெல்லும் திறன், பாணர்ப் புரக்கும் வண்மை, செங்கோல் மாண்பு முதலியவெல்லாம் புலப்படும்படி, வழுவறத் தேர்ந்து வடித்து மதுரந் தழுவிய நவரசத் தண்டமிழ்ப் பாக்கள் பலபல பாடி அரசனோடு இன்புற்று வாழ்ந்திருந்தனர்.

# 5. வருடம்—மாதம்—தேதி

[திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M.A., B.L., M.O.L.]

"வரலாற்று உணர்ச்சி இந்த நாளேய சிறப்பு; மேலே-நாட்டார் நம் உள்ளே கிண்டி எழுப்பியது; பழைய நாளில் இது நம்மிடத்தில் மருந்துக்கும் காணக் கிடையாது." ஈது ஒரு குற்றச்சாட்டு. ஆதலின், இதனே ஆராய வேண்டும். 'வரலாற்று உணர்ச்சி' என்பது என்ன? 'இந்த வருடம் - இந்த மாதம் - இந்தத் தேதியில் - இந்தச் செய்தி நிகழ்ந்தது,' என முறையாக எழுதி வருவதோ, அந்தக் கண் கொண்டு நிகழ்ச்சிகளேக் காண்பதோ வரலாற்று உணர்ச்சி-யாகும். இவ்வாறு அன்றி, முன்னது பின்னதாக, பின்னது முன்னதாகக் குழம்பிக் கூறுவது வரலாற்றுணர்ச்சியற்ற நிலேயாகும். முன் பின் என்பதனேப் பற்றி எண்ணுதிருப்-பதும், வரலாற்றுச் சுரணே கெட்ட நிலேயேயாகும். இந்தக் கேடு கெட்ட நிலேயிலேயே நம் முன்னேர் இருந்தனர் என்-பதே குற்றச்சாட்டு. **சங்கம்** எப்போதிருந்தது? **கம்பர்** எப்போதிருந்தார்? **ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்** என்ற மூவருக்கும் **மாணிக்கவாசகர்** முந்தியவரா, பிந்திய-வரா? இவை எல்லாம் இன்னும் தீராத சிக்கல்கள். வரலாற்-றுணர்ச்சி நம்முன்னேருக்கு இல்லாமையாலேயே இத்தகைய சிக்கல்கள் பின்னி முறுக்கிக்கொண்டனவாம்.

ஆனுல், கால வரலாற்றினே அறியாமலா நம்முன்னேர் இருந்தனர்? குழந்தை பிறந்ததும் பஞ்சாங்கத்தினேப் பார்ப்-பது இன்று நேற்று வழக்கமா? காலங்கண்ட வழக்க-மல்லவா? இராமருக்கும் நேரில் இருந்து பஞ்சாங்கம் பார்த்-தாற்போலக் கம்பர் சாதகம் குறித்து வைத்திருக்க-வில்லேயா? **கண்ணகி** மதுரையை எரித்ததற்கும் நாளும் கிழமையும் மாதமும் இளங்கோ குறிக்கவில்லேயா? நாம் ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் திரு நட்சத்திரம் கொண்டாடி வரவில்லேயா? 'சாதகம் குறித்தது உண்டு; திருநட்சத்திரம் கொண்டாடுவதும் உண்டு. வரலாற்று உணர்ச்சி இல்லேயே!' என்கின்றனர் குற்றச்சாட்டுக் கூறுவோர்.

மூடபத்தியும் மூடநம்பிக்கையும் காரணமாகப் பஞ்சாங்கம் பார்த்தனரே அன்றி, வரலாற்றுச் சுரணையால் இவற்றினைக் குறிக்கவில்லையாம். ஆனால், இன்று பஞ்சாங்கம் பார்க்கவில்லையா? மூடநம்பிக்கையாலா பார்க்கின்றனர்? வருடம் மாதம் நாள் பாராத நாள் உண்டா? நாம் எழுதுவதற்கு எல்லாம் பிள்ளையார் சுழியாக இன்று அமைவது வருடம் மாதம் தேதிக் குறிப்பன்றோ? தேதியோடு விட்டோமா? கையிலேகடிகாரம், சுவரில் கடிகாரம், தெருவில் கடிகாரம், தொழிற்சாலையில் கடிகாரம்—அவைமட்டுமா? தூங்கும் போதும் நகரத்துக் கடிகாரங்கள் கணீர் கணீர் என மணி அடித்துக் காதினைத் துளைத்து, உடலையும் உள்ளத்தையும் ஊடுருவிப் பாய்ந்து, காலத்தினை அறிவித்துத் தட்டி எழுப்ப வில்லையா? மணிக்கணக்கு - நிமிஷக் கணக்கு - அதோடு விட்டதா? நொடிக்கணக்கும் அன்றோ கடிகாரம் கூறி நம்மைத் தன் ‘டிக் டிக்’ வழியே இமைதோறும் ஆண்டு வருகிறது? வேலைக்குப் போவது - வேலை நிறுத்தம் - உணவு நேரம் - ஓய்வு நேரம் - வீடு திரும்பும் நேரம்—எல்லாம் கடிகாரம் காட்டுகிறபடியே நடக்கின்ற புதுமையை நாம் பார்க்கவில்லையா? இது வியப்பினும் வியப்பு! நம் அறிவும் கடிகாரத்தோடு ‘டிக் டிக்’ அடித்துத் துடித்து ஊசல் குண்டு போல மாறி மாறி வருகிறது. பள்ளியிற்புகும்போதே நம் குழவிகள் இப்படிப் பழகிவிடுகின்றன. பத்து மணிக்குக் கணக்கில் அறிவு தோய வேண்டும்; 11 மணி ஆனதும் கணக்கிலிருந்து திடீர் என அறிவு தமிழ்ப் பாட்டில் பாயும்; 12 ஆனதும் வரலாற்றில் அகப்பட்டு வளர்ந்தோங்கும்; ஒரு மணிக்குச் சிறிது ஓய்வு கொள்ளும். இரண்டு மணியானதும் நிலப்பரப்பில் வளைந்து வளைந்து உலகெலாம் சுற்றி வரும்; மூன்று மணியானதும் விளையாட்டில் துள்ளிக் குதிக்கும்; விளையாட்டும் கடிகாரப்படிதான் நடக்கும். எல்லாம் வல்ல கடிகாரமே, எங்கள் அறிவின் நடையினையும் அடக்கியாளும் பேராற்றலே, எனக்கெனக் காப்புக் கட்டியது போலக் கடிகாரம் காட்டிவரும் இந்தத் திருக்கோலம் மூடபத்தி அன்று போலும்! கடிகார கால காலனே, வாழ்க! வாழ்க! வாழ்க!

காலம் எப்போதும் நம்மை ஆண்டு வருகிறது. நாள் நட்சத்திரம் பார்ப்போம் ஒரு காலத்தில்; மணி நிமிஷம் வினாடி பார்ப்போம் ஒரு காலத்தில். அவ்வளவே வேற்றுமை. சூரியனோடு எழுகிறோம்; ஓடி ஆடுகிறோம்; விழுகிறோம். சூரியன் ஒரு பெரிய கடிகாரம் - இயற்கைக் கடிகாரம். அவ்வளவே வேற்றுமை. மாதமே ஒரு கடிகாரம். நிலாவைப் பார்க்கிறோம். கடிகார முள் போல வளர்ந்தும் தேய்ந்தும் மாறி மாறிக் காலம் காட்டுகிறது அது. வருஷக் கடிகாரமும் உண்டு. மழையோடு உழுகிறோம்; காற்றோடு தூற்றுகிறோம்; முல்லைப் பூவோடு சிரிக்கிறோம்; என்றும் எங்கும் நிகழும் காட்சியே இவை எல்லாம். என்ன வேற்றுமை! முன் எல்லாம் பெரும்பொழுது சிறு பொழுதாய் இருந்தன. இப்போது செகண்டு கணக்கில் ஓடுகிறது.

‘ நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.’

என்றார் வள்ளுவர், 2000 ஆண்டிற்கு முன்; 2000 ஆண்டிற்குப்பின், ‘ நொடி என ஒன்றுபோற் காட்டிப்படி உயிருண் இடியது உணர்வார்ப் பெறின்,’ என்று பாடுகிறோம். இவ்வளவே வேற்றுமை.

இந்தக் கால உணர்ச்சியைக் காலன் என்ற நினைவின்றி, வளர்ச்சி என்றே கருதி எண்ணுவது வரலாற்றுச் சுரணையாம். ‘ சாவு நெருங்குகின்றதே!’ என்று தம் வயிறு பிடித்தனர் அந்நாளைய மக்கள். ‘வளர்கின்றோமே!’ என்று களிக்கின்றனர் இந்நாளைய மக்கள். உலகமே வளர்கிறது என்ற ஆறுதல் இங்கு உண்டு. உலகப் பொதுமையை இந்நாளினர் வளர்க்கின்றனராம். ஆனால், அந்நாளினரும் ஒரு வகையான பொதுமையினையே வளர்த்தனர். முன்காலம், வருங்காலம் என்று பேசுவது என்றுந்தான் வழக்கம். வருடம், மாதம், தேதி என்று உலக நிகழ்ச்சிகளை எல்லாம் ஒன்றுபடுத்தி அட்டவணை செய்ய வேண்டுமாம். அதுவே வரலாற்றுச் சுரணை! ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவ்வக்காலத்தோடும் அவ்வவ்விடத்தோடும் நெருங்கிப் பிணைந்து எழும் போது தனி மனிதர்களின் நிகழ்ச்சியாகச் சிறந்தோங்குகின்றது. உலகப் பெருமை, அந்த அட்டவணையின் ஒற்று-

மையில் அன்றித் தனி நிகழ்ச்சியில் இல்லை. தனி நிகழ்ச்சி காட்டுவது தனி மனிதனது சிறப்பு. அவன் யார்? அவன் செய்த செயல் என்ன? சிறப்பு என்ன? இப்படியே ஆராய்ச்சி தொடங்கி, வரலாற்றுச் சுரணையை வளர்க்கின்றது. **அலெக்ஸாண்டர், சீசர், சந்திரகுப்தன், செங்கிஸ்கான், நெப்போலியன்**—இவ்வாறு தனி மக்களின் பெருமை **கார்லைல்** மூளையையும் கலக்கியது. உலகப் போர்களின் வரலாறு வரலாற்றுணர்ச்சி? 'இல்லை,' என்கிறோம் இன்று. ஆனல், இது வரை எழுதியுள்ள வரலாறுகள் நாம் விரும்பும் சமுதாய வரலாரு? அல்ல; தனி மக்கள் வரலாறே ஆம்.

இந்த நாட்டில் தனி மனிதனது கிறுக்கு எல்லாம் சிறப்பாவதில்லை. தனி வழிப் போபவன் வெறியன். 'உலகத்தார் உண்டு என்பது இல் என்பான், வையத்து அலகையா வைக்கப்படும்.' இங்கு உரிமை இல்லை என்பதன்று பொருள். உலக உண்மைப் பொதுமையில் குளித்துத் திளைக்க வேண்டும். அத்தகைய பொது உண்மையைக் காண முயலுவதே சிறப்பு. நான் மட்டும் காணும் பச்சைக்கதிரவனும் செவ்வெலியும் மஞ்சட்காக்கையும் உண்மையாராய்ச்சி அல்ல; என் கனவு, கட்குடியின் களிப்பாட்டம்; வெறியாட்டம்; அவ்வளவே. பொது உண்மை ஆராய்ச்சியில் முதலில் அதனைக் காண்பது நானுகலாம். ஆனல், அனைவரும் அதனைக் காணக்கூடும். **நியூட்டன், ஆப்பிள் பழம்** மரத்திலிருந்து விழுவதனைக் கண்டு கவர்ச்சிச் சட்டத்தினைக் கண்டார். முதல் முதலில் அவருக்கு விளங்கினுலும் அனைவரும் காணக் கூடியதே இது. கட்குடியனும் காணும் செவ்வெலியையோ கரிய பாலினையோ வேறொருவன் இவ்வாறு காண முடியுமா? எனவே, சிறப்பு எது? தனி மனிதனது கிறுக்கா? அன்று. பொதுமைக் காட்சியே ஆம். இதனுலேயே வெறி கொண்ட தனி மகனைத் **திருவள்ளுவர்** அலகையாக வைத்து எண்ணுகிறுர்.

நியூட்டன் கவர்ச்சிச் சட்டக் காட்சியைக் கண்டது **17**-ஆம் நூற்றுண்டில் ஆகலாம். ஆனல், அச்சட்டம் பிறந்தது அவர் கண்ட அன்றுதானு? அன்றன்று. உலகம் தோன்றிய நாளாக அச்சட்டம் இயங்கித் திருவிளையாடல்

புரிந்துதான் வருகிறது. அது முதலில் நியூட்டனுக்கு ஒரு நாள் தெளிவாயிற்று. அந்த நாளில் என்ன சிறப்பு? பொதுமையை மறைக்கும் திரையன்ரே அது? பொதுமை நியூட்டன் வழி வெளி வந்ததே பெருமை. இவ்வாறு கூறுவதால் நியூட்டனது பெருமை குறையவில்லை. அவர் பெருமை தனி மகனது கிறுக்கு அன்று; கட்குடியனது வெறிக்காட்சியன்று. உலகம் அனைத்தும் காணும் காட்சியைக் காட்டிக் கொடுத்ததே அவர் பெருமை ஆம். அப்போதுதான் அக்காட்சி தனியுடைமையாகாது பொது உடைமையாகும். எல்லார்க்கும் பொது அனுபவமாவதே இங்குள்ள சிறப்பு. பொற்குடத்தில் வந்தது பால். பொற்குடத்தாலோ பாலுக்குச் சிறப்பு? இதனால் பொற்குடத்துக்குச் சிறப்பில்லை என்பதும் இல்லை. அதே போலக் கவர்ச்சிச் சட்டம் நியூட்டன் வழியே விளங்கிற்று என்பதாலா அந்தச் சட்டத்திற்குச் சிறப்பு? இல்லை. உண்மையாக எவருக்கும் அது பொதுவாக விளங்குவதாலேயே அதற்குச் சிறப்பு. இவ்வாறு கூறுவதால் நியூட்டனுக்குச் சிறப்பொன்றும் இல்லை என்பதும் இல்லை. இந்தச் சட்டத்தினை அவர் வாழ்வில் ஒரு சிறு நிகழ்ச்சியாக வருடம் மாதம் தேதியிட்டுக் காண்பதினும், 'என்றும் உள்ளதொரு நியதி' என்று காண்பதிலேயே பெருமையுண்டு. இந்த நோக்கத்தை வற்புறுத்துவதே நம்முடைய நாட்டுப் பழம்பெருமை.

இங்கே நூலையோ, கண்டு பிடித்த எந்திரத்தையோ, பதிவு செய்யும் உரிமை இல்லை; 'காப்பிரைட்டுச்' சட்டம் இங்கே இல்லை; 'பேட்டண்டு' சட்டம் இல்லை. பொதுவுடைமை இயற்கையாகவே சிறந்து விளங்கும் இடம் அறிவுலகந்தான். உண்மையைப் பங்கிட்டால் குறையுமா? அறிவினைப் பங்கிட்டால் குறையுமா? விளக்கிலிருந்து விளக்குகளை ஏற்றி வரும்போது ஒளி குறைகின்றதா? இல்லை. வளர்கிறது; வளர்ந்தோங்குகிறது. ஆனால், அந்த அறிவுக்கும் விலை வைத்தால், விலையைப் பங்கிடப் பங்கிடக் குறையத்தான் செய்யும். தனியுடைமைக்கு விலை கூறலாம். பொதுவுடைமைக்கு விலை கூறுவார் யார்? பொதுவுடைமைக்கு வருடம் மாதம் தேதியும் இல்லை; விலையும் இல்லை.

தோற்றமும் இல்லை; அழிவும் இல்லை. கவர்ச்சிச் சட்டம் எப்போது தோன்றியது? எப்போது அழியும்? அதன் விலை என்ன? யார் அறிவார்?

கவர்ச்சிச் சட்டம் வெறுஞ்சட்டமாய் மட்டும் இருக்க-வில்லை; உலகினையே, ஏன் அண்டத்தின் இயக்கத்தினையே, விளக்கி வைக்கின்றது. நம் காதல் பொங்குகிறது. மனித இயல்பு அது. இரத்த ஓட்டம் இருக்கும் வரை இத்தகைய காதல், இத்தகைய அன்பு, இத்தகைய பாராட்டு இருந்தே தீரும். மந்திரங்களைப் போற்றுவார் மந்திரம் கண்ட ருஷி-களையும் போற்றவில்லையா? இந்தச் சட்டம் உண்மை எனக் காட்டியவர் யார் என்றால், சான்று பகரவும் ஒருவர் வேண்-டாவா? ஆனால், இப்படி ஒருவர் பெயர் நமக்குத் தெரியாமற்-போனால், அந்தச் சட்டத்தின் மதிப்புக் குறையுமா? அது விளங்கிய வருடம் மாதம் தேதி தெரியாமற்போனால், அந்த உண்மையின் பெருமை குன்றுமா? எல்லாரும் காணும் காட்சியே அதன் பெருமையை என்றென்றும் கூறவில்லையா?

நெருப்பினைக் கண்டு பிடித்த நியூட்டன் யார்? கண்டு பிடித்த வருடம் மாதம் தேதி எவை? அறியோம். இருந்தா லும், நெருப்பிற்சமைத்து விருந்துண்கிறோம்; ஊரையும் எரிக்கிறோம். நம்மையும் அறியாமல் அந்தப் பேர் அறியாத பெருந்திருவாளனை நம் நா வாழ்த்துகின்றது; நம் மனம் வெற்றி முரசறைகின்றது. **புரோமதீயஸ்** என்று அவனுக்குப் புனைபெயர் சூட்டினர் கிரேக்கர். அப்படிக்கற்பனையிலேனும் உருவாக்கிப் பார்க்க முயலுகிறது நம் வரலாற்றுச் சுரணை! கரும்பு எவ்வளவு இனிக்கிறது? சர்க்கரைப் பங்கீட்டுக் காலத்தில் அதனை மறக்கப் போமா? அது ஒரு புல். அதனை வளர்த்தவன் யார்? பேர் அறிவோமா? நாள் அறிவோமா? இருந்தும் அப்பெருந்தகையானுக்கு, சர்க்கரையைச் சுவைக்கும் போதெல்லாம், நம் நாவும் மனமும் நம்மையும் அறியாமல் பல்லாண்டு பாடவில்லையா? **அதியமான்** எதிர் அவன் இனிமையைக் காண்கின்ற புலவர் அந்த அதிய-மானது முன்னோனே இதனைத் தமிழ் நாட்டில் கொண்டு வந்தான் எனப் பாட்டுப் பாடுகின்றார். அவனோடு ஒன்று-படுத்தி உருவாக்கி அப்பெரியானைக் காண விழைகின்றது

அவரது பாட்டுள்ளம். சக்கரம் கண்டவன் யார்? அதனைத் திருமாலின் கையில் ஏற்றிவிட்டோம். நூல் நூற்றவன் யார்? நெய்தல் தொழில் கண்டவன் யார்? காந்தியார் வணங்கிய அப்பெருமகன் பேரையும் அறியோம்; ஊரையும் அறியோம்; நாளையும் அறியோம். ஆனால், காந்தியடிகளது அறவாழி அந்த நயமுடையானை எண்ணி எண்ணியுருகி-யன்றோ ஓடியது, ஓடுகிறது! யாழ் கண்டவர் யார்? இவை எல்லாம் ஊர் பேர் நாள் இன்றியே உலகப் பொருளாய் இனிக்கின்றன. பழமொழிகள் யார் இயற்றியன? யார் அறிவார், ஊரும் பேரும் நாளும்? அவை எல்லாம் பொது உடைமை.

கம்பர், வள்ளுவர்—இவர்கள் பேரை அறிவோம்; ஊரும் சொல்கின்றார்கள்; காலமும் ஆராய்கின்றார்கள். ஆனால், இவர்கள் பெருமை ஊரிலும், பேரிலும், நாளிலும் அடங்கு-மா? ஊரைக் கடந்து, உலகை எட்டியோர் இவர்; காலங்-கடந்த காட்சியர். பேருக்குத்தான் பொருள் என்ன? கம்ப-ராமாயணம் பாடியவர் என்பதே கம்பர் என்பதற்குப் பொருள். திருக்குறள் பாடியவர் என்பதே வள்ளுவர் என்-பதற்குப் பொருள். ஆராய்ச்சியாளர் இப்பெயர்களுக்கு வேறு பொருள் கூறலாம்; ஆனால், அப்பொருள் அன்று இப்-பெயர்கள் நமக்கு முதன்முதலில் நினைப்பூட்டுவது.

கம்பரைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன; வள்ளுவரைப் பற்றியும் வழங்குகின்றன. அவை வரலாறல்ல. இவர்கள் நூலை ஓதுகின்றனர். ஏதோ ஒரு வியப்புத் தோன்றுகிறது. அதனைப் பாட்டாகப் பாடுகின்றனர்; கதையாகப் பாடுகின்றனர். யார்? பேர் ஊர் நாள் இல்லா-தவர். கர்ண பரம்பரை—இந்தக் கட்டுக் கதைகளும் பொது உடைமையே. இந்த உண்மையை உணராது இவற்றினை வரலாறு என மயங்கி ஆராய்வது ஆமையோட்டில் இறகு தேடுவது போலாம். அண்டம் எல்லாம் ஒன்றாகப் பார்க்-கின்ற காட்சி அங்குத் தோன்றுகிறது. இராமன் கதையில் மலை பேசுவது போலக் கம்பர் கதையில் கட்டுத்தறியும் கவி சொல்லும். வள்ளுவர் குறளில் தெய்வம் மடி தட்டி வருவது போல வள்ளுவர் கதையிலும் தெய்வமே உருவெடுத்து வரும்

கம்பர் நாவில் நாமகள் எழுதுவாள்; **தூமிதம்** என்ற சொல்லை எடுத்துக் கொடுப்பாள். இந்த 20-ஆம் நூற்ருண்டில் **ஹார்டி** என்ற அறிஞர் எழுதிய **டைனஸ்ட்** (Dynast) என்ற காப்பியத்தில் தரைமகள் பேசுகின்ருள் அன்ருே? பாவலர் கூறும் கதை வெறுங்கதை அன்று; அண்டமுழுதும் ஒன்றித்து நின்று உருவெடுக்கும் கற்பனைப் பிழம்பு. இதனை உணர்ந்தால் பாட்டில் வரும் அரக்கரும் தேவரும் விளங்குவர். பொது உடைமை இவ்வாறு அண்டத்தையே விழுங்கி நிற்கின்ற காட்சியைப் பாராட்டிலும் பாவாணரைப் பற்றிக் கட்டுக் கதையிலும் காண்கிருேம்.

பொது உடைமை மறைவாய் இருந்து வெளி வருகிறது. கதிரவன் சுடரொளி வீசி ஒளிர்கின்ருன். கதவை மூடிக்கொண்டிருக்கும் வரை இருட்டில் புழுங்குகிருேம்; கதவைத் திறந்ததும் கதிரவன் ஒளியில் குளிக்கின்ருேம். உலக உண்மைகள், அழகின் இன்பங்கள்—அறிவின் ஆக்கப்பாடுகள் என்பது விளங்குகின்றது. ஆனுல், நம் கண் திறக்க வேண்டும். நம் கதவு திறக்க வேண்டும். திறக்கின்ருர் நியூட்டன். திறக்கின்ருர் கம்பர். திறக்கின்ருர் வள்ளுவர். திறக்கின்ருர் காந்தியடிகள். என்றுமுள்ளது இன்று விளங்குகிறது; என்றும் விளங்குவதாகிறது. நிறைமொழி மாந்தர் பெருமை, மறை மொழி காட்டிவிடுகிறது. மறை என்பது இதுதான். என்றும் உள்ளது வேதம் என்பதற்கு இதுதான் பொருள் என்கிருர் **விவேகானந்த அடிகள்**. நியூட்டன் கண்ட சட்டம் என்றுமுள்ள மறையே. வள்ளுவர் பாடியதும், கம்பர் பாடியதும் இத்தகைய மறைகளே. எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் ஒத்த உண்மைகள், அழகுக் காட்சிகள், ஒழுக்கக் குன்றுகள். இந்தச் சிறப்பினை நினைத்தன்ருே **திருமறை** என்று வள்ளுவர் குறளை வாழ்த்தி வருகின்றது உலகம்? திருமறைக்கு வருடம் மாதம் தேதி கூறுபவர் யார்? ஊர் பேர் ஏது?

எனவே, மேலை நாட்டு மனப்போக்கினையும், நம் நாட்டு மனப்போக்கினையும் நாம் அறிந்துணர்தல் வேண்டும். வரலாற்று உணர்ச்சி வேண்டும். நம் அறிஞர்மேல் உண்மையான காதல் இருக்குமானுல், வருடம் மாதம் தேதி தெரிய

வேண்டும்; ஊரும் பேரும் தெரிய வேண்டும். நம் நாட்டில் வரலாற்று உணர்ச்சி இல்லாமல் இல்லை. அரசர் தம் செயல்களைத் தாம் அரசுக்கு வந்த ஆண்டிலிருந்து எண்ணிக் கல் வெட்டுக்களில் அடித்து வையாமல் இல்லை. ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு யுகமானால், இவற்றினைக் கோவைப்படுத்துவது எப்படி? சகவருஷம் குறித்த கல்வெட்டுக்களுமுண்டு. கலியுகவருஷம் குறித்து எழுதினோரும் உண்டு. ஆனால், ஆழ்வார் முதலியோர் கதை எழுத வந்தவர்கள் இந்தக்கலியுக வருஷத்தையும் கற்பனை செய்து கதை எழுதத் தொடங்கியதால், வரலாற்றுணர்ச்சி குழம்பிக் கலங்கத் தொடங்கியது. உலக அடிப்படை இல்லாத குறை ஒன்று உண்டு. அதனை அமைக்கவே கலியுகத்தினைப் பின்னணி இசையாகக்கொண்டு பாட்டுக்களைப் பாடினர் பலர். ஆனால், வரலாற்றினையும் கற்பனையையும் ஒன்று கலப்பது இரவையும் பகலையும் ஒன்று சேர்ப்பது போலாகும். இரண்டின் சுவையும் இங்குக்கிடைப்பதில்லை. கிறிஸ்து சகாத்தக்கணக்கு உலக அடிப்படையை இன்று தருகிறது. "வரலாறு தனிமக்கள் வரலாறு அன்று; மக்கட்சமுதாய வரலாறே," என்ற உண்மையும் இன்று பெருகி வருகிறது.

தனி மகனைச் சமுதாயத்தில் கடலில் உப்பைக்கரைப்பது போலக் கரைத்து வந்தோம். கரைபடாத கற்களே வரலாற்றுவீரர் எனத்துலங்குகின்றன. இவர்கள் கதையினை வரலாறாக எழுதவும் செய்தனர் நம் முன்னோர். **ஹர்ஷசரிதம், பாணன்** எழுதியது. **கல்ஹணர்** எழுதிய **ராஜதரங்கிணி,** இன்றும் சிறந்த வரலாற்று நூலாகத்திகழ்ந்து விளங்குகிறது. **வேதாந்ததேசிகர் தின**சரி பாடினார். தினசரி எழுதும் வழக்கமும் தமிழ் நாட்டிற்குப் புதியது அன்று. **டியூப்ளே** என்ற பிரெஞ்சுத் தலைவர்க்கு நண்பு பூண்டு வாழ்ந்த தமிழ் வள்ளல் புதுச்சேரி **ஆனந்தரங்கப்பிள்ளை** எழுதிய தினசரி (Diary), தினசரி இலக்கியத்திற்கே சிறந்த எடுத்துக்காட்டாகும். இருந்தும் என்ன பயன்? தமிழன் அதனைக் கண்டு கற்றுக் களிப்பதற்கு இல்லை. ஆங்கிலமறிந்தால், அதன் மொழி பெயர்ப்பினை ஓதி உணரலாம்.

"ஒரு சிலரே மக்கள்; பிறர் எல்லாம் மாக்கள்," என்ற

இந்த நம்பிக்கை ஒழிய வேண்டும். ஒவ்வொருவனிடமும் மனிதப்பெருமை—கடவுட்டன்மை—விளங்குகிறது என்ற உண்மை பரவ வேண்டும். காந்தி பள்ளியில் படித்த போது காந்தியடிகளாவார் என யார் அறிந்திருப்பர்? ஒவ்வொருவனிடத்தும் காந்தியடிகளாகும் நிலே, புத்தராகும் நிலே, நியூட்டன் ஆகும் நிலே மறைந்து கிடக்கிறது. இந்த உண்மையை உணர்ந்திருந்தால், புற்றீசல் போல மக்களேச் சாவ விடோம். இந்தத் தனி மகனது தெய்வத்தன்மை—சீவனுக்குள்ளே சீவன் விளங்கும் உண்மை—பரவவேண்டும். அதன் வழியே வளரும் வரலாற்றுச் சுரணேயே உலகினே வாழ்விக்கும்.

# 6. கம்பர் கவி நயம்

[திரு. வே. வேங்கடராசுலு ரெட்டியார்]

நாடகங்களில், தலைவர் முதலியோருக்குக் குற்றம் நேராதவாறும் சுவை குன்றாதவாறும் வேண்டுமிடங்களில் கதையை மாற்றியும் கூட்டியும் அமைப்பது வழக்கு. அவ்வாறே, கம்பரும் தமது காப்பியத்தில் தலைவர் முதலியோருக்குக் குறை நேராதவாறும், சுவை குன்றாதவாறும், தமிழ் மரபு கெடாதவாறும் ஆங்காங்கு வேண்டும் மாறுபாடுகளைச் செய்திருக்கிறார். அதனால், கம்பராமாயணத்தைக் '**கம்ப நாடகம்**' என்று சொல்வது உண்டு. கம்பராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியும் பொருணயம் மிக்கது. ஆதலின், அறிஞர் அக்காப்பியத்தின் எப்பகுதியிலும் செய்யுட்களின் சிறப்பினை எடுத்துக் கூறுதல் கூடும்.

சிலவிடங்களில் கம்பர் கூறியிருக்குங் கருத்து வடமொழி மகாகவி **காளிதாசர்** கூறியிருப்பதினும் சிறப்புடையதாயிருக்கின்றது. **திலீப சக்கரவர்த்தி** கடல் சூழ்ந்த உலகம் முழுவதனையும் ஓரூரைப் போலக் கொண்டு தன் ஆணை செலுத்தி வந்தான் என்று காளிதாசர் கூறியிருக்கின்றார். கம்பர் **தசரதனைப்** பற்றிக் கூறுமிடத்து,

> 'வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
> செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்.'

என்று கூறியிருக்கின்றார். இவ்வுவமை எத்துணைச் சிறப்புடையது! ஒரே செய்யினால் தன் குடியினை ஓம்புதலுடைய வறியவன், உரிய காலத்தில் பயிரிட்டு, களை கட்டு, காவல் காத்து வருவான். அவ்வறியவன் வாழ்க்கைக்கு அச்செய் இன்றியமையாததாயிருத்தல் போல, தசரதன் வாழ்விற்குக் குடிகள் இன்றியமையாதவர்களாயிருக்கின்றார்கள் என்பதும் போதரும்.

கம்பர் சில இடங்களில் பண்டைப் பெரும்புலவர் கருத்துக்கட்கு மாறாக நயமுறக் கூறியிருக்கின்றார். பண்டைப் புலவர் ஒருவர், 'அரசனே குடிகட்கு உயிராயிருக்கிறான்,' என்பதை,

'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்.'

என்னும் அடிகளிற்கூறியிருக்கின்றார். கம்பர் இதற்கு மாறாக,

'செயிரிலா உலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்.'

என்று கூறியுள்ளார்.

பண்டைப் புலவர், குடிகளிலும் அரசன் சிறந்தவனென்று கருத்துக்கொண்டனர். கம்பநாடர் குடிகளே சிறப்புடையவரென்றும், அரசன் குடிகள் வாழ்விற்கு ஆதாரமாயிருக்கிறானென்றும், அவ்விருவர்க்கும் உள்ள தொடர்பினை நன்கு வெளியிட்டுள்ளார்.

மக்கள் சாதாரணமாக ஒத்துக்கொள்ளுதற்கு இயலாத பொருளையும் அமையுமாறு கம்பர் நயமுறக் கூறியிருக்கிறார்.

'சேரா தனவுள வோபெருஞ் செல்வர்க்கு?'

என்று கூறின், அனைவரும் ஒத்துக்கொள்வர். அவ்வாறன்றி, 'ஒரு சிறிதும் இல்லாத ஏழைக்கு யாதுதான் இயையாது?' என்றால், யாவர் அதனை உடன்படுவர்? ஆயின், கம்பர், **இராமபிரான்** கூற்றாக,

'மேவு கானம் மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன;
தாவி லெம்பிகை சாலை சமைத்தன;
யாவை யாதுமி லார்க்கியை யாதவே?'

என்றுகூறி அமைத்திருக்கிறார். இவ்வாறு அமையாததனையும் அமைத்துக் காட்டும் திறன் வேறுசில இடங்களிலும் காணலாகும்.

இக்காலத்துப் பல திறப்பட்ட கொள்கையினருக்கும் கம்பராமாயணத்தில் ஆதாரம் உள்ளன. கம்பர், பொதுவுடைமைக் கொள்கையினருக்குத் தலைவராயிருக்கிறார்; சீர்திருத்தக் கொள்கையினருக்கு முதல்வராயிருக்கின்றார்.

பொதுவுடைமைக் கொள்கையினர், நாட்டில் மக்கள் அனைவருக்கும் பட்டினியின்றி உணவு கிடைத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர். கம்பர் அவ்வளவில் அமைதியுற்றிலர்;

'எல்லாரும் செல்வராயிருத்தல் வேண்டும்; பெருஞ்செல்வராயிருத்தல் வேண்டும்; எல்லாப் பெருஞ்செல்வமும் உடையவராய் இருத்தல் வேண்டும்,' என்று கருதுகின்றார்; தமது இக்கொள்கையை அயோத்தி நகரின் சிறப்பினைக் கூறுவதன் மூலமாக வெளியிட்டிருக்கிறார்:

'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல் வமும்எய்த லாலே
இல்லாரும் இல்லை; உடையார் களும்இல்லை மாதோ!'

என்பது காண்க. இக்கருத்தினையே,

'யாதும், கொள்வா ரிலாமைக் கொடுப்பார் களும்இல்லை, மாதோ.'
'வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்.'

என்பவற்றாலும் வலியுறுத்தியுள்ளார்.

பெண்டிர் எல்லாரும் தமக்குப் பொருந்திய கல்வியும் செல்வமும் உடையவராயிருத்தல் வேண்டும் என்பது கம்பர் கருத்து; அதனைக் கோசல நாட்டின் சிறப்பினைக் கூறுமிடத்து,

'பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்,
விருந்து மன்றி.விளைவன யாவையே?'

என்னும் செய்யுளால் அறிவித்துள்ளார்.

நெடுங்காலத்தின் பின்னர் நிகழக்கூடிய செயல்கள் பெரும்புலவருள்ளத்தில் தோன்றுதல் உண்டு. அதனைக் கம்பரிடத்தும் காணலாகும். இக்காலத்திற் சில யாண்டுகளாகப் பெரிய நகரங்களில் பானீயத்தைச் சிறு குழலினால் பருகும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. கம்பர், தமது இராமாயணத்தில் இவ்வழக்கினைக் கூறியிருக்கிறார்:

'தேன்றரு கமலச் செவ்வாய் திறந்தன னுகர நாணி
ஊன்றிய கழுநீர் நாளத் தாளினால் ஒருத்தி உண்டாள்.'

'பெண் மகளொருத்தி பலருக்கு முன் வாய் திறந்து தேன் பருக நாணிக் கழுநீர் நாளத்தால் உண்டாள்,' என்று கூறியிருப்பது அமைதியும் அருமையும் உடையதாயுளது.

கம்பர் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு செய்யுட்களை அமைக்-

கும் ஆற்றல் மிக்கவர். செய்யுட்களில், சுவைக்குத் தக்க எழுத்-துக்கள் அமைந்திருக்கும். குகன் சினத்தோடு கூறுமிடத்-துள்ளதாகிய,

'போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர் வரிற்சிலை மாமேருச்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளோடுந்
தானை படத்தனி யானை படத்திரள் சாயேனோ?'

என்னுஞ் செய்யுளில், வெகுளிச் சுவைக்கேற்ப வல்லொற்று மிக்கு வருமாறு அமைத்துள்ளார். சூர்ப்பணகை இராம-பிரானிடம் வருதலைக் கூறுமிடத்து,

'பஞ்சியொளி விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

என்னுஞ் செய்யுளில் மெல்லொற்றும் இடையொற்றுமே பயின்று வருமாறு அமைந்திருப்பது உவகைச் சுவைக்கு உரியதாக உளங்கொளத் தக்கது.

கம்பர் கீழ்க் கூறியதனை மறவாது மேலே கூறி முடிக்கும் நினைவு பெரிதும் உடையர். 'சூர்ப்பணகையினால் சீதையின் அழகினையறிந்த இராவணன், அப்பொழுதே சீதையைத் தன் உள்ளத்திற்சிறையிட்டான்,' என்று

'மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன் இதயமாஞ் சிறையில் வைத்தான்.'

என்னும் அடிகளிற்கூறினார். ஆகலின், சீதையை அசோக-வனத்தனின்று சிறை மீட்டதேயன்றி, இராவணன் உள்-ளத்தினின்றும் இராமர் சிறை மீட்டார் என்பதனை,

'கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?'

என்னும் அடிகளாற் கூறியிருக்கின்றார்.

'இராமபிரான் முடி துறந்து காடு செல்லக் கண்ட நகர-

மாந்தர், இராமபிரான் பிரிவினுல் தம் உயிர் நீங்கப் பெற்றவர் போன்ருர்,' என்பதனை,

' ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம்.'

என்று கூறிஞராகலின், இராமபிரான் அயோத்திக்கு வந்த-போது,

' காவியங் கழனி நாடும் நகரமுங் கவன்று வாழும்
மாவிய லொண்க ணுரும் மைந்தரும் வள்ள லெய்த
ஓவியம் உயிர்பெற் ருலே யொத்தனர் உணர்வு பெற்ருர்.'

என்று முன்பு நீங்கிய உயிர் வந்தது எனக் கூறியுள்ளார்.

# 7. கருத்தைக் கிளத்தல்

[திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார்,
F.R.S.A. (London)]

ஈங்குக் 'கருத்தைக் கிளத்தல்' எனப்படுவது, 'ஒரு மேடைமீது ஒருவர் உள்ளக் கருத்தைப் பேச்சில் வெளியிடுதல்,' எனப் பொருள் தருவதாகும். ஒரு மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களே உயிர் நாடி போல்வனவாம். அவை மணம் பெற்ற மலர்களையொக்கும். நிறம், மணம், சேர்க்கை அறிந்து மலர் மாலை தொடுக்கப்படுவது போல, நல்ல மேடைப் பேச்சில் அருங்கருத்துக்களைச் சமயத்திற்கேற்றவாறு அளந்தும், கிளந்தும் அழகுறத் தொகுத்துக் கூறுதல் வேண்டும். ஒருவர் மனத்தின்கண்ணுள்ள கருத்துக்களைப் பேச்சில் எவ்வாறு கைக்காதவாறு புகுத்திச் சபையோர் மனத்தைக் கவர்வதென்பதை ஈங்குத் துருவி ஆராய்வோம் :

**இரு வகைக் கருத்துக்கள் :**

பேச்சில் கருத்துக்கள் இரு வகையவாம். பேச்சுப் பொருள் சம்பந்தமாகவும், சபைக்கேற்றவாறும் நூலறிவைக் காட்டி, மேற்கோள்களைக் கொட்டிச் சாதாரணப் பேச்சுப் போக்கில் ஒருவர் தமது கருத்தை ஈங்கொன்று ஆங்கொன்றாக வெளியிடுதல் ஒரு வகையாம். மற்றொரு வகைப் பேச்சு, உண்மையைத் தழுவிப் பேச்சுச் செய்தி குறித்துத் தமது ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் பெற்ற கருத்துக்களைப் பூசல் புனைந்துரை இன்றி வெளிப்படையாகப் புகல்வதாம். இம்முறையால், அறியா மக்களையும், தம் அறிவுக்கொத்த கூட்டத்தாரையும், ஒரு நல்ல பேச்சாளர் தமது கருத்தோடு ஈர்த்துச் செல்லுதற்கியலும். தம்மிலும் மேம்பட்டோரையும், இரு மனப்பட்ட சபையோரையும் தம் வயப்படுத்தற்கு வேறு வழிகளுண்டா என்பதை அனுபவ வாயிலாகவும், சிறந்த எடுத்துக்காட்டுக்களைக்கொண்டும் நோக்குதல் நம் கடனேயாம்.

**ஏற்கும் கருத்துக்கள் :**

ஒரு சபையின்கண் நம் கருத்துக்களைப் புகுத்துவதைக் குறித்து நோக்குமுன், நமது அன்றாட வீட்டுப் பழக்க வழக்-

கங்களை உன்னுதல் நன்று. நம் மனைவி மக்கள் அல்லது நேயர்கள் மாட்டு நம் கருத்துக்களைப் புத்தி புகட்டும் முறையில் கூறி, அவர்கள் அறிவைத் தீட்ட முயன்றால், அன்னார் அவற்றை ஏற்கமாட்டார்களென்பது ஒரு புறமிருக்க, தாம் அறிவிலிகளெனக் கருதப்படுவதைக் குறித்தும் சினம் கொள்வர் என்பது ஒருதலை. அது குறித்த தமது எண்ணத்தையும் சீற்றத்தையும் வெளிப்படையாகக் காட்டாவிடினும், அவர்கள் மனத்திடை அவை நீடித்துக் குடிகொண்டிருக்குமென்பது உறுதி. அந்நிலையில் ஒருவர் புகலும் உயர்கருத்துக்கள் ஏற்கப்படாது, விழலுக்கிறைத்த நீராகுமன்றோ? ஓர் எசமானர் அல்லது ஒரு காரியாலயத்தின் தலைவரிடம் ஒரு சிப்பந்தி அறிவுகொளுத்து முறையில் தனது கருத்தைச் சிறந்ததாகக் கருதி அதை உரைக்கப்புகின், அஃது யாது பயனைத் தரும்? அஃது ஏற்கப்படாவிடின், அச்சிப்பந்தியின் அலுவலுக்கே பேராபத்து விளைவிக்குமன்றோ? அதுபோலவே, ஒரு மேடைப் பேச்சாளராயினும், மற்றெவராயினும், ஒரு நூதனக் கருத்தைச் சபையில் வெளியிடுவரேல், அதனை உடனே ஏற்காது அதற்கு மாறான கருத்துக்களிலும் எதிர்ப்பிலும் மக்கள் மனம் தானே ஈடுபடுதல் இயல்பு. உலகில் எல்லா மக்கள் மாட்டும் தானெனும் அகந்தையும், வேறொருவர் தமக்கு அறிவு புகட்ட அருகரோ என்ற மனப்பான்மையும் எழுதலும் இயல்பாம். ஆயினும், மனப் பண்பாடுடைய மக்கள் ஈண்டியுள்ள ஓரவையில் ஒரு பேச்சாளரின் கருத்துக்கள் அங்ஙனே ஏற்கப்படும். எனினும், ஒரு சபையில் குழுமியுள்ள மக்கள் அனைவரும் பண்பட்ட மனமுடையவரென எண்ணுவதற்கில்லை.

### வழி யாது?

பின்னர் ஒரு பேச்சாளர் தம் கருத்துக்களை அவையோர் ஏற்குமுறையில் வெளியிடுவதெங்ஙனம்? அக்கருத்துக்கள் மிக்க கடின உழைப்பாலும் ஆராய்ச்சி அறிவாலும் திரட்டப்பட்டவைகளாமன்றோ? எனவே, அவை பயனளிக்காது பாழ்படுவதை எப்பேச்சாளரும் விரும்பார். ஆகையினால், ஒரு பேச்சாளர் வெளியிடும் கருத்துக்களை அறிவு புகட்டும்

முறையில் கூற முடியாது. '**நயம்படவுரை**' என்னும் மூதுரையை மனத்திலிருத்தி நளினமாகக் கூறுதல்வேண்டும் என்பது வேண்டப்படுவதாம். சாதாரணமாக ஒரு பேச்சாளர் கொண்டுள்ள கருத்தே தம்முடைய கருத்துக்கு ஒத்ததென்றும், அல்லது அதற்குச் சமானமானதென்றும், அதனையே அப்பேச்சாளர் வெளியிடுகின்றார் என்றும் எண்ணும் மனப்பான்மையைப் பெறாத சபையோர், அவர் வெளியிடும் கருத்துக்களை எக்காலும் ஒப்பார்; ஏற்கவும் மறுப்பர் என்பது உறுதி.

**ஒப்பிடுவோம் :**

தமிழ்ப் பேச்சிலும் பத்து வகைக் குற்றங்களையும், பத்து வகை அழகுகளையும், முப்பத்திரண்டு உத்திகளையும் விரிவஞ்சாது விளக்கிக் கூறியுள்ள நம் பெரியோர், "ஒரு கருத்தைச் சொல்லி நிலை நாட்டிய பின் அதனைப் பின்பு வேண்டுந்தோறும் சபையோர் கைக்காதவாறு நளினமாகப் புகலுதல் வேண்டும்," எனக் கூறிப் போந்தனர். ஆனால், ஒரு கருத்தைச் சொல்லி அதனை நிலை நாட்டும் மார்க்கத்தை விளக்கினாரில்லை; அதற்கான வழி வகைகளையும் வரையறுத்துச் சில எடுத்துக்காட்டுக்களால் விரித்து விளக்கினாரில்லை. மேற்குறித்த பேச்சிலக்கணத்தை ஒரு பேச்சாளர் கைக்கொண்டால், அவர் பேச்சுக் கருத்துக்கள் சபையோரால் நிச்சயமாகவே ஏற்கப்படுமென்பது அன்னோர் துணிபாம். அவ்வாறே நாமும் எண்ணுவது தவறன்று. கடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மேலை நாடுகளில் தோன்றிய மேடைப் பேச்சாளர் இது குறித்துக் கொண்ட முறையை நோக்குதல் பயனளிப்பதொன்றும். **சாக்கிரட்டீஸ்** எனும் நாவலர், தம் கருத்துக்களை வினாக்களாக எழுப்பி எழுப்பியே மக்கள் மனத்தில் ஊன்றப் பதித்து வந்தாரென்பது சரித்திரமாம். அவ்வினாக்கள் சரமாரியாக எழும் போது, சாதாரண மக்களும் அவைகட்குச் சரியான விடை யாதெனத் தங்கள் மனத்திற்சிந்திப்பரன்றோ? அவ்வினாக்களைச் சிந்திக்கச் சிந்திக்க விடைகள் தாமே உதித்தலும், பிறத்தலும் இயல்பன்றோ? சிந்தனைச் சத்தியின் வலிமை

பெரிது; மிகப் பெரிது! அவ்வாறு சிந்தனையில் முனைந்து தெளிவு கண்ட மக்கள் அக்கருத்துக்களைக் களிப்புடன் ஏற்பரென்பதில் ஐயமில்லை. **டெமாஸ்தனிஸ்** எனும் நாவலர் கோன் கைக்கொண்ட கருத்தை விளக்குமுறை ஒப்புயர்வற்ற ஒரு தனி முறையாம். தம் ஆசிரியர் **சாக்கிரட்டீஸ்** பேச்சு முறையை இவர் பின் பற்றினாரில்லை. தம் கருத்துக்களை வெளியிடுங்கால், சபையோர் மனத்தை இவர் பேச்சுடன் ஈர்த்துச் சென்று, அவர்களே, "இது சரியா, அல்லது அது சரியா?" என்று தாங்களே ஆலோசித்து முடிவு கட்டும் முறையில் பேசி, இவர் வெற்றிகண்டவர் என்பது சரித்திரம். கருத்துப் பொலிவுகொண்ட விறுவிறுப்பான பேச்சையேஇவர் எப்போதும் விரும்பினராம். ஏனெனில் அத்தகைய கருத்துக்கள் சண்டமாருதமென வெளி வரும்போது விறுவிறுப்பான எண்ணத்தைச் சபையோர் மனத்திடை எழுப்புமென்பது இவர் கருத்தாகும். இவர் பேச்சு முறை எந்நாளும் உலக மக்களால் போற்றப்படுவதாம்; பின் பற்றப்படுவதுமாகும்.

இங்கிலாந்து தேசத்துப் பாராளுமன்றத்தில் சிறந்து விளங்கிய **கிளாட்ஸ்தன், டிஸ்ரேலி** ஆகிய இருவரின் பேச்சு முறையையும் நோக்குவோம் : முன்னவர் மலையருவி வீழ்ச்சி போன்ற தமது பேச்சுப் பெருந்தாரையால், தம் கருத்துக்களை விளங்கவைத்து ஏற்கச் செய்தனர். டிஸ்ரேலியார், தமது பேச்சு நயத்தாலும், சிறந்த எடுத்துக்காட்டுக்களாலும் மின்னென ஒளிரும் கருத்துக்களாலும் சபையோரைத் தம் வயப்படுத்தினரென்ப. பிரதம மந்திரியாரான **சர் ராபர்ட்டு பீல்** என்பாரை மேலே காட்டிய முறையில் நயம்படத் தாக்கிப் பேசியிருப்பது உலகுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் இன்றும் விளங்குவதாம்.

அமெரிக்கா நாட்டு ஐக்கியபதியான **உட்ரோ வில்ஸன்** எனும் மேதையார், தாமே யோசித்துத் தம் கருத்துக்களை முடிவு கட்டாமல், எவர் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதில்லை. எனவே, ஒருவர் தம் கருத்துக்களை ஏற்கச்செய்ய வேண்டின், அக்கருத்துக்களை அவரிடம் உறுத்தி முடிவாகக் கூருது, மேலெழுந்தவாரியாகச் சொல்லி, அவரையே அது

குறித்துச் சிந்தித்து முடிவுகட்டச் செய்தலே சிறந்த உபாயம் என்பது அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் கூற்றுகும். அவ்வாறே தம் சொந்தக் கருத்துக்களைச் சபை முன் கூறுவதில் உட்ரோ வில்ஸன் மிக்க கவனம் செலுத்தி வந்தாராம். ஈங்கு ஒரு விளக்கம் மிகையன்று. தூண்டி-லிடுவோர் மீன் வாயில் முள்ளைப் புகுத்துவதில்லை. ஆயினும், அம்மீன் வலிந்து வந்து முள்ளில் சிக்கச் செய்வர். அது போலவே, ஒரு பேச்சாளர் தம் கருத்துக்களில் மக்கள் மனத்தை வலிந்து சிக்கச்செய்தல் வேண்டும். பொதுவாக, பேச்சாளர் தூண்டிலிடுவோரையொத்து, தமது கருத்தாகிய முள்ளெறிந்து, சபையோர் மனமெனும் மீனைப் பிடித்தல் முறையாம். சில வேளை மீன் முள்ளில் சிக்குருது தப்பி-யோடினும் ஓடும்; அன்றி முள்ளில் சிக்கினும், அம்மீன் துள்ளித் துடித்து அம்முள்ளுடன் விரைந்து நீரிடைச் செல்லினும் செல்லும். அது போலவே, ஒரு கருத்தைப் புகுத்தப்பெற்ற சபையோர் மனமும் மேற்குறித்த பல நிலைகளையடைதல் இயல்பாம். ஒரு கூட்டத்தில் தமது கருத்தை விளக்கப் புகும் ஒரு பேச்சாளர், "இது குறித்து நீங்களும் யோசித்திருப்பீர்கள்; இது சிறந்த வழி அல்லவா? இவ்வாறு நடந்தால் வெற்றி பெறுவோமா? நாம் செய்ய வேண்டுவது இதுவோ?" என்று நளினமாகத் தம் கருத்துக்-களைக் கூறுவாராயின், அவ்வாறு வெளியிடப்படும் கருத்-துக்கள் சபையோரால் ஏற்கப்படும் என்பது திண்ணம்.

**சீரிய முறை :**

கருத்துக்களை ஊன்றி விளக்கும் மற்றுமொரு சிறந்த முறை குறித்தும் சிந்திப்போம்: ஒரு பேச்சாளர் வெளியிடும் தம் கருத்துக்களுக்கு எதிரிடையான ஆட்சேபங்களைத் தாமே வருவித்துக் கூறின், முள்ளம்பன்றி போல மயிர் சிலிர்த்துத் தாக்க முயலும் எதிரிகளையும், தம் கருத்துக்-களுக்கு இணங்கச்செய்ய இயலுமென்பது பெரியோர்கள் கண்ட நெறியாம். அமெரிக்கா நாட்டின் தலை சிறந்த பெரி-யோரான **பெஞ்சமின் பிராங்கிளின்** என்பார், "ஒருவர் கருத்தைப் பிறரொருவரை ஏற்கச் செய்தற்கு, அக்கருத்தைப்

பிழையின்றியும், நிதானமாகவும், ஊன்றியும் எடுத்துக் கூறுதல் வேண்டும். அப்படிக் கூறுங்கால், தம் கருத்துக்கள் தவறாய் இருப்பினும் இருக்கலாமென உபசார வழக்கில் ஒருவர் நளினமாகக் கூறுவது நற்பயனளிப்பதாகும். அவ்வாறு சந்தேகமாகக் கூறுமிடத்துக் கேட்போர் மனம் அக்கருத்துக்களில் படிந்து அவற்றை ஏற்றுக்கொள்ளும் என்பது உறுதி. அவ்வாறன்றி, தமது கருத்தை வற்புறுத்தப் புகுவரேல், சபையோர் அதனை ஏற்காது காற்றில் விடுப்பர்,'' எனக் கூறியுள்ளார். அவர் தமது வாழ்நாளில் கையாண்ட சீரிய முறை இதுவேயாம்.

**விபரீதமுறை :**

கருத்தை ஊன்றி விளக்கும் மற்றுமொரு விபரீத முறை உண்டு: அம்முறையைக் கையாள்பவர், சிறந்த நாவன்மையும், மிகுந்த நினைவாற்றலும், பகுத்தறிவும் உடையராயிருத்தல் வேண்டும். அம்முறையை ஒரு சிறந்த எடுத்துக்காட்டால் விளக்குவாம் :

சென்னை, உயர்நீதி மன்றத்தில் **எர்ட்லி நார்ட்டன்** என்ற பிரபல வழக்கறிஞர் பல ஆண்டுகளுக்கு முன் அறிவுச் சுடரென ஒளிர்ந்தார். அவர் எத்தகைய நீதிபதியையும், தமது பேச்சு வன்மையாலும், சட்ட ஞானத்தாலும் மயக்குவிக்கும் திறனுடையார். அவர் ஓரமயம் பிரதம நீதிபதிமுன் ஒரு கொலை வழக்கில் குற்றவாளியின் சார்பில் தோன்றினர். விசாரணை முடிந்தபின் நடுவர்களை விளிக்க எழுந்த அவர், குற்றவாளிக்கு மரணதண்டனை பெற்றுத் தரும் முறையில் சர்க்கார் வக்கீல் பேசவேண்டிய எதிரிடையான நுணுக்கங்களையெல்லாம் நீண்ட நேரம் விவரித்துப் பேசிக்கொண்டிருந்தார். அது நீதிபதியையும், நீதி மன்றத்தில் குழுமியிருந்த மக்களனைவரையும் திடுக்கிடச் செய்ததென்பது மிகையன்று. "சர்க்கார் வழக்கறிஞர் இங்கிருப்பதால் அவர் கட்சியை அவரே எடுத்துச் சொல்லட்டுமே?'' என நீதிபதி அவரைக் கடிந்தார். அப்போதுதான் தமது விவாதப் போக்கை நீதிபதி சரியானபடி அறிந்துகொள்ளவில்லை என்பதை நார்ட்டன் உணர்ந்தார். தமது வாதத்தைத்

துவக்குமுன் அவ்விதத் திகைப்பை முதற்கண் உண்டாக்க வேண்டுமென்பது அவர் கருத்து. "நான் இன்னும் எனது வாதத்தைத் தொடங்கவில்லை," என்ற பீடிகையுடன் மேலும் தொடர்ந்து பேசினர். அவர் தமது வாதத்தை ஆரம்பித்த முறை இதுவாம்: "நான் எதிர்க் கட்சியின் வாதங்களை-யெல்லாம் வலிய வருவித்தும், எதிர் பார்த்தும் ஒரு மணி நேரம் ஒன்றையும் விடாது அலசியலசியே பேசியிருக்கிறேன். நான் எடுத்துக் காட்டியவைகளுக்கு மேல் ஏதேனும் ஒன்-றிருக்குமாயின், சர்க்கார் வக்கீல் அதை நடுவர்கட்கு எடுத்-துக் கூறட்டும். நான் இப்போது என் கட்சிக்காரன் சார்பில் நின்று அவன் குற்றவாளியே அல்லனெனச் சாட்சியங்களி-லிருந்தும் சட்ட வாயிலாகவும் நிரூபிப்பேன்," என்று கூறி எதிரிடை வாதங்களைச் சின்னபின்னமாகத் தகர்த்தெறிந்தார். தாம் கூறுவதை முடிவுரையாக அவர் நடுவருக்குக் கூற-வில்லை. ஏன்? 'நடுவர்கள் பேரறிஞர்கள் அன்றே?' என்றார். "அதுவா அல்லது இதுவா?" என்று கேட்டுக்-கொண்டே தமது வழக்கை நீதிபதிக்கும் நடுவர்களுக்கும் நயம்பட ஒப்பிட்டு விளக்கியே விவாதித்தார். இவ்வாறு தம் விவாதக் கருத்துக்களை நடுவர்களின் சிந்தனைக்கு விடாது தாமே முடிவு காட்டிப் பேசியிருந்தால், அக்குற்றவாளி மரணதண்டனையடைந்திருப்பான் என்பது திண்ணம்.

இதே முறையை அமெரிக்க ஐக்கியபதி **ஆபிரகாம் லிங்கன்** வழக்கறிஞராயிருந்தபோது கையாண்டிருப்பதாக அவரது சரித்திரம் பகரும். அவர் காட்டிய வழியைப் பிற்-காலத்தில் நார்ட்டன் துரையும் பின்பற்றினர் போலும்! இவ்-விருவரும் பின் பற்றிய முறை சிறந்த முறையேயாம். ஆயினும், இது சாதாரண மக்களும், அறிவிற்சிறந்த அரும்-பிறவிகள் அல்லாதாரும் கையாள முடியாத விபரீத முறை-யாம். எனவே, இதுகாறும் கூறியவற்றால், ஒரு நல்ல மேடைப் பேச்சாளர், தம் கருத்துக்களை ஒரு சபை முன் கூறுவதில் எத்துணை ஆழ்தல் வேண்டுமென்பதும், எவ்வாறு விளக்கல் வேண்டுமென்பதும் நன்கு புலப்படும்.

# 8. எவரெஷ்டு ஏற்றம்

[திரு. த. சே. உமாபதி, M.A., L.T., Dip. in Geog.]

' மன்னும் இமய மலையெங்கள் மலையே !
மாநிலம் மீதது போல்பிறி திலையே !'

என்று கூறிப் **பாரதியார்** புகழ்ந்தது நம் பாரதநாட்டின் வடவெல்லையாய் அமைந்துள்ள **இமாலயம்.** இஃது ஏறத்தாழ முந்நூறு மைல் அகன்று, மூன்று தொடர்களாய், இந்தியாவின் வடக்கில் இயற்கையன்னையால் எழுப்பப்பட்ட எழில் மிக்க சுவர் போல, ஈராயிரம் மைல் தொலைவு கிழக்கு மேற்கில் வியாபித்திருக்கிறது. இதன் ஒவ்வொரு தொடரிலும் வெண்பனியால் மூடப்பெற்று விண்ணளாவி நிற்கும் சிகரங்கள் பல உள. அவற்றுள் உலகத்தின் உன்னதச் சிகரமாய் விளங்கும் **எவரெஷ்டு,** நடுத்தொடரின்கண் இடம் பெற்று, இமாலயச் சிகரங்களுக்கு நடு நாயகமாய்த் திகழ்கின்றது. இதன் உயரம் 29,002 அடி என்று கூறப்பட்டு வந்தது. பூமியினுள் அவ்வப்போது நிகழ்கின்ற இயற்கை வேறுபாடுகளுள் ஒன்று காரணமாகச் சமீபகாலத்தில் இம்மலை சிறிது உயர்ந்துவிட்டதென்றும், இங்ஙனம் தோன்றிய வேறுபாட்டால் இதன் உயரம் 29,141 அடியாகிவிட்டதென்றும் நாம் செய்தித் தாள்களின் வாயிலாக அறிந்தோம். எவரெஷ்டின் உயரம் எதுவாயினும், அது உலகத்திலேயே உயர்ந்த சிகரம் என்பது ஒருதலை.

எவரெஷ்டு மலைக்கு அப்பெயர் தோன்றிய காரணம் பலருக்குத் தெரியாது. 1841-ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் இமயமலைப் பிரதேசத்தை ஆராய்ந்து அளந்து தரைப்படம் தயாரிக்க நியமிக்கப்பட்டவர் **சர் ஜார்ஜ் எவரெஷ்டு** என்பவர். அவர்தாம் முதன்முதலில் எவரெஷ்டின் உயரத்தையறிந்து வெளியிட்டவர். ஆதலால், அவ்வுன்னதச் சிகரத்துக்கு அவர் பெயரே வழங்கப்பட்டது.

இமாலயத்தின் பல்வேறு உன்னதச் சிகரங்களின் உச்சியை அடைய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்பல. இம்முயற்சிகளில் ஈடுபட்ட நாடுகளும் பல. இம்முயற்சிகளில் கிடைத்த வெற்றிகள் சில ; தோல்விகள் பல. இவற்றையெல்-

லாம் ஈண்டு விரிக்கப் புகின், இக்கட்டுரை ஒரு நூலாய் வளரும். ஆதலின், எவரெஷ்டின் உச்சியை அடைய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப்பற்றி மட்டும் இங்குக் கவனிப்போம் :

1921-ஆம் ஆண்டிலேதான் முதன்முதலாக எவரெஷ்டு ஏற்றம் தொடங்கியது. அப்போது **ஹவர்டு பியூரி** என்பவர் தலைமையில் ஒரு குழுவினர் 23,000 அடி உயரம் சென்று, தட்ப வெப்பநிலை சாதகமாய் இராமையால், தமது முயற்சியைக் கைவிட்டனர். அடுத்த ஆண்டில் **சார்லஸ் ஜி. புரூஸ்** என்பவர் தலைமையில் மற்றொரு குழுவினர் எவரெஷ்டின் உச்சியை அடைய முயன்றனர். அக்குழுவினரும் 27,300 அடி உயரத்துக்கு மேற்செல்ல முடியாமல் திரும்பினர். மறுபடியும், 1924-ஆம் ஆண்டில் **நார்ட்டன்** என்பவர் தலைமையில் வேறொரு குழுவினர் சென்றனர். அக்குழுவினர் 28,100 அடி உயரம் வரை சென்றனர். எனினும், **மல்லரி, இர்வின்** ஆகிய சிறந்த மலையேறிகளின் உயிர்களை எவரெஷ்டு கொள்ளை கொண்டது. பின்னர், 1933-ஆம் ஆண்டில் **ஹ்யூ ரட்லெஜ்** என்பவர் தலைமையிற் சென்றவர்களும் 28,100 அடி உயரமே செல்ல முடிந்தது. அதன் பிறகு 1935-ஆம் ஆண்டில் **எரிக் ஷிப்டன்** என்பவர் தலைமையில் எவரெஷ்டின் உச்சியை அடைதற்கேற்ற வேறு நல்ல வழிகள் கிடைக்குமோவென ஆராயச் சென்ற குழுவினர், 23000 அடி உயரம் வரை சென்று திரும்பினர். அடுத்த ஆண்டில் மீண்டும் **ஹ்யூ ரட்லெஜ்** தலைமையில் சென்றவர்கள், 23,000 அடி உயரம் சென்று, தட்ப வெப்ப நிலை சிறிதும் சாதகமாய் இல்லாமையால், ஒன்றும் சாதிக்கமுடியாமல் திரும்பினர்கள். பின்னர், 1938-ஆம் ஆண்டில் **எச். டில்மென்** என்பவர் 23,200 அடிக்குமேல் ஏற முடியாமல் திரும்பினர். அடுத்த ஆண்டில் இரண்டாவது உலகப்போர் தொடங்கியபடியால், எவரெஷ்டு முயற்சி அறவே கைவிடப்பட்டது.

1951-ஆம் ஆண்டில் அம்முயற்சி மீண்டும் மேற்கொள்ளப்பட்டது. இம்முறை **ஷிப்டன்** என்பவர் சில மலையேறிகளுடன் எவரெஷ்டுக்குத் தென்புறமுள்ள நேப்பாள நாட்டி-

னின்று எவரெஷ்டின் உச்சியை அடைதற்கு வழிகளை ஆராயத் தொடங்கினர். 20,600 அடி வரை சென்ற ஷிப்டன் குழுவினர், எல்லாப் பக்கங்களையும் நன்கு ஆராய்ந்து, நேப்பாளத்திலிருந்தே எவரெஷ்டின் உச்சியை அடைய முடியும் என்னும் முடிவுக்கு வந்தனர். இதற்கு முன் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் திபேத்து நாட்டின் மூலம் சென்று எவரெஷ்டின் வடக்குப் பக்கத்திலிருந்தும் கிழக்குப் பக்கங்களிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டன என்பது ஈண்டு அறியத் தக்கது. அன்றியும், இது வரை குறிக்கப்பட்ட எட்டு முயற்சிகளும் ஆங்கில மலையேறிகளாலேயே மேற்கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1952-ஆம் ஆண்டில் வசந்த காலத்தில் சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த **எட்வர்டு விஸ் டுனுண்டு** என்னும் சிறந்த மலையேறுபவர் தமது நாட்டைச்சேர்ந்த சிலருடன் எவரெஷ்டின் உச்சியை அடைய முற்பட்டார். அவர் அரிதின் முயன்று 28,215 அடி உயரம் ஏறிச்சென்று, தோல்வியுற்றுத் திரும்பினர். அதே ஆண்டில் இலையுதிர் காலத்தில் **கேபிரியல் ஷிவல்லி** என்னும் மற்ருெரு ஸ்விஸ் மலையேறுபவர் மீண்டும் எவரெஷ்டு ஏற்றத்தில் ஈடுபட்டு, 26,575 அடி உயரம் சென்று தோல்வி கண்டார். எனவே, 1921-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்ட பத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. ஆயினும், 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்,' என்னும் முதுமொழிப்படி பதினோராவது முறையாக ஆங்கிலேயர் 1953-ஆம் ஆண்டு மேத்திங்களில் மீண்டும் எவரெஷ்டு ஏற்றத்தில் ஈடுபட்டனர். இக்குழுவில் **டாம் போர்டில்லான், சார்லஸ் இவான்ஸ், சார்லஸ் வில்லி, மைக்கல் வார்டு, ஆல்பிரடு கிரிகரி, வில்பிரடு நாய்ஸ், ஜி. ஸி. பாண்டு, வெஷ்டுமகாட்டு, எட்மண்டு ஹில்லரி, டென்சிங்கு நார்கே** ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவுக்குத் தலைமை தாங்கி நடத்தும் பேறும் பெருமையும் **கர்னல் ஹண்டு** என்னும் ஆங்கிலேயர் பெற்றார்.

மலை ஏறுவதென்பது எளிதன்று. உயர்ந்த மலைகளின் மீது மேலே செல்லச் செல்ல உறைபனியும், பனிப்பாறை-

களும், பனியாறுகளும், கருமேகமும், பெருங்காற்றும் ஏறுகின்றவர்கட்கு இடையூறுகளாய் நின்று எத்துணை வைர நெஞ்சு படைத்த வீரர்களையும் நடுங்கச் செய்யும். ஆதலால், உன்னத மலையின் உச்சியை அடைய விரும்புகின்றவர், ஒரு குறிப்பிட்ட உயரத்தில் கூடாரங்களையடித்துக்கொண்டு, சில நாட்கள் அங்குத் தங்கி, உறைபனிச் சூழ்நிலையில் காணப்படும் தட்ப வெப்பத்துக்கு ஏற்றவாறு வாழப் பழகிக்கொள்வார்கள். அதன் பிறகு அவர்கள் அடிவாரப் பாசறை (Base Camp)யை அமைத்துக்கொள்வார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, பிராணவாயுப் பெட்டிகள், கூடாரங்கள் முதலியன அப்பாசறையில் சேகரித்து வைக்கப்படும்.

பிராணவாயுப் பெட்டி என்பது என்ன என்பதும், அதன் உபயோகமும் அவசியமும் என்ன என்பதும் நாம் அறிய வேண்டுபவையாகும். நாம் வசிக்கும் பூமியை வாயு மண்டலம் சூழ்ந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இவ்வாயு மண்டலம் பூமியின் அருகில் செறிவுற்றும், மேலே போகப் போகச் செறிவு குறைந்தும் அமைந்துள்ளது. எனவே, மனிதன் பூமியினின்று மேலே போகப் போக மூச்சு விடுவதற்குத் தேவையான வாயுவின்றி மூச்சுத் திணறும். ஆதலால், உன்னத மலைகளின் உச்சியை அடைய முயலும் மலையேறிகள், பிராணவாயுப் பெட்டியைக் கொண்டு செல்ல வேண்டுவது இன்றியமையாதது. இப்பெட்டிகள் மலையேறிகள் முதுகிலோ மார்பிலோ கட்டிக்கொள்ளத் தக்கவாறு சிறியவையாய் இருக்கும். இவற்றினின்று பிராணவாயு மூக்கிற்செல்லுவதற்கு இரப்பர்க் குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கும். மலையேற்றத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் அடிவாரப் பாசறையில் (Base Camp) சேகரித்து வைத்துக்கொண்ட பின், மலையின்மீது சிறிது தூரத்துக்கு ஒன்றாகச் சில பாசறைகளை (Camps) அமைப்பார்கள். தங்கள் தலைவரின் ஆணைப்படியும், முன்னேற்பாட்டின்படியும் ஒவ்வொரு பாசறையிலும் மலையேறிகளுள் ஒருவர் அல்லது இருவர் சில மூட்டை தூக்கிகளோடு தங்கியிருந்து தங்கள் கடமைகளைச் செய்வார்கள். எனவே, அடிவாரப் பாசறைக்கும் மிக உயரத்தில் உள்ள கடைசிப் பாசறைக்கும் அடிக்கடி

போக்கு வரவு நடைபெற்றுக்கொண்டே இருக்கும். இதனுல், தம் குழுவினரைப்பற்றிய செய்திகளை எல்லாரும் அறிந்துகொள்ள முடியும். இம்முறையையே வெற்றி பெற்ற குழுவினரும் மேற்கொண்டனர்.

இவர்கள் முதலில் மூன்று வாரங்கள் இமாலயத்தின் தட்ப வெப்ப நிலையைத் தாங்கிக்கொள்வதற்குரிய பயிற்சியைப் பெற்ருர்கள்; இரண்டாவதாகத் தங்கள் அடிவாரப் பாசறையிலிருந்து 2300 அடி வரை ஐந்து பாசறைகள் அமைத்தார்கள்; மூன்ருவதாக, 2300 அடிக்கு மேல் மூன்று பாசறைகள் அமைத்தார்கள். இவற்றுள் மூன்ருவது பாசறை 27500 அடி உயரத்தில் அமைக்கப்பட்டது. அங்கிருந்து உச்சியை அடைய 1500 அடி உயரமே இருந்தது. அங்கிருந்து போர்டில்லான், இவான்ஸ் என்னும் இருவரும் முதல் தாக்குதலைத் தொடங்கித் தோல்வியுற்றனர். மறு நாள் (29–5–1953) காலை 8–30 மணிக்கு டென்ஸிங்கும் ஹில்லரியும் எவரெஷ்டின்மீது தங்கள் இறுதித் தாக்குதலைத்தொடங்கி முற்பகல் 11-30 மணிக்கு உலகத்தின் உன்னதச் சிகரத்தின் மீது அடி வைத்துப் பதினைந்து நிமிஷங்கள் அங்குக் கழித்த பின் வெற்றி வீரராய்த் திரும்பினர்.

இனி, முப்பதாண்டுகளாகப் பன்முறை முயன்றும் பணிந்து கொடாதிருந்த எவரெஷ்டு சிகரம், 1953-ஆம் ஆண்டு, மேத்திங்கள், இருபத்தொன்பதாம் நாள் முற்பகல் 11–30 மணிக்குப் பணிந்து கொடுத்த செய்தியைப் பற்றி அறிவோம்: எவரெஷ்டின் உச்சியை அடைந்து, அங்குப் பதினைந்து நிமிடங்கள் வரை இருந்து, நமது நாட்டு மூவண்ணக் கொடியையும், நேப்பாள நாட்டுக் கொடியையும், ஆங்கில நாட்டுக் கொடியையும், ஐக்கிய நாட்டுக் கழகத்தின் கொடியையும் அங்கு நாட்டி, ஒருவரையொருவர் புகைப்படம் பிடித்துக்கொண்டு திரும்பிய—நினைப்பவர் நெஞ்சம் நிலைகுலையச் செய்யும்—துணிகரச் செயல்கள் இமாலயத்தின் இடையில் இடம்பெற்றுள்ள நேப்பாள நாட்டிற்பிறந்த டென்ஸிங்கு நார்கேய்க்கும், நியூஸீலந்து நாட்டிற்பிறந்த எட்மண்டு ஹில்லரிக்கும் உரியவையாகும்.

டென்ஸிங்கு என்பவர் நேப்பாள நாட்டில் கிழக்குப்

பகுதியில் உள்ள **சோலோகும்போவில்** பிறந்தவராயினும், நமது நாட்டின் வடக்கில் உள்ள டார்ஜீலிங்கிற் குடியேறி அங்குப் பிறந்து வளர்ந்த மாது ஒருத்தியை மணந்து-கொண்டு அங்கேயே வாழ்ந்து வருகின்றவர். இவர் இமால-யத்தில் வாழும் மக்களுள் **ஷெர்ப்பா** வகுப்பைச் சேர்ந்தவர். இவருக்கு இப்போது (1953) வயது முப்பத்தொன்பது. இவர் இருபது வயது எட்டுவதற்கு முன்னரே வீட்டை விட்டுப் பெற்ரோர்க்குத் தெரியாமல் ஓடி வந்து, டார்ஜீலிங்கிலிருந்து இமாலயத்தின்மீது அடிக்கடி ஏற முயன்றுகொண்டிருந்த மலையேறிகளின் மூட்டை தூக்கியும், வழி காட்டியுமாய் இருந்து வந்தார். இவர், இது வரை எவரெஷ்டின்மீது ஏற முயன்ற பதினொரு குழுக்களுள், ஒன்பது குழுக்களுடன் கலந்துகொண்டிருக்கிரார் என்பதே இவருக்கு மலையேற்றத்-திலுள்ள மட்டற்ற ஆவலை வெளிப்படுத்துகின்றதன்ரோ? இவர் இந்த இறுதிக்குழுவில் கலந்துகொண்ட போது மட்டும் தம்மையும் மலையேறிகளுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டா-லன்றித் தாம் அக்குழுவிற் கலந்துகொள்ள முடியாதெனக் கூறிவிட்டார். இவரது அரிய பெரிய ஆற்றலை அறிந்த ஹண்டு அதற்கு இசைந்தார். அதன் பயனாக, 1952-ஆம் ஆண்டு, மேத்திங்கள், 28-ஆம் நாள், ஸ்விஸ் மலையேறியான **ரெய்மாண்டு லாம்பர்ட்டு** என்பவருடன் எவரெஷ்டின்மீது 28,215 அடி வரை சென்று திரும்பியவர், சரியாக ஓராண்டும் ஒரு நாளும் கழித்து, 1953-ஆம் ஆண்டு, மேத்திங்கள், 29-ஆம் நாள் எட்டுதற்கரிய எவரெஷ்டின் உச்சியிற்சென்று நின்ரார். உயிரைப் பொருளாக மதியாமல் புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மாண்பு மிக்க மலையேற்றத்தில் ஈடுபட்ட உலகத்து மலையேறிகளின் பட்டியலில் முதலிடம் பெற்ற பெருமை இவரைக்காட்டிலும் இவர் நாட்டு மக்களின் மகிழ்ச்சிக்குரியதாகும்.

டென்ஸிங்கின் புகழைப் பங்கு கொண்ட **ஹில்லரி** என்பவர் **நியூஸீலந்து** நாட்டில் உள்ள **ஆக்லண்டிற்** பிறந்-தவர். இப்போது (1953 ல்) இவர் வயது முப்பத்து நான்கு. தேனீ வளர்ப்பதை இவர் தமது தொழிலாகக் கொண்டவர். இவர் தமது இருபதாம் வயதிலேயே, தம் தாயாரிடம் தாம்

என்றேனும் ஒரு நாள் எவரெஷ்டின் உச்சியை அடைவது திண்ணம் என்று கூறினாராம். இவர் தம் நினைவைச்செயற்படுத்திய ஆற்றல், விடாமுயற்சி வெற்றிதரும் என்னும் படிப்பினையை நமக்களிக்கின்றது. இவர் கடந்த மூன்றாண்டுக்குள் நான்கு முறை இமாலய ஏற்றத்திற் பங்கு கொண்டுள்ளார். ஆறடி உயரமுள்ள கம்பீரமான தோற்றம் உள்ள இவர், தமது நாட்டு விமானப் படையில் தொண்டாற்றி, 1945-ஆம் ஆண்டில் அத்தொழிலைக் கைவிட்டார் ; அதுமுதல் மலையேற்றத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்தி, இறுதியில் மலையேற்றத்தில் மாண்பு மிக்க வீரர் என்று உலகம் புகழும் உன்னத நிலையை அடைந்துவிட்டார்.

இவ்வீரர்களின் வெற்றி,

> ‘ தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்.’

என்னும் வள்ளுவர் வாக்கை நாம் நமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்பதை நமக்கு நன்கு புலப்படுத்துகின்றதன்றோ ?